بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 9

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444-ஷஃபான் 09 ★ ஹிஜ்ரி ஷம்ஸி-1402, அமான் 02 ★ 02 மார்ச் - 2023

## அல்லாஹ்வின் கட்டளை

وَجَزٰٓؤُا سَیِّئَۃٍ سَیِّئَۃٌ مِّثۡلُہَا ۚ فَمَنۡ عَفَا وَاَصۡلَحَ فَاَجۡرُہٗ عَلَی اللّٰہِ ؕ اِنَّہٗ لَا یُحِبُّ الظّٰلِمِیۡنَ ﴿۴۱﴾

**பொருள் :**

ஒரு தீங்கிற்குரிய கூலி அதேயளவு தீங்கேயாகும் (என்பதனை அவர்கள் நினைவிற் கொள்கின்றனர்). ஆனால் எவர் மன்னித்து, சீர்திருத்துகிறாரோ அவருக்குரிய நற்பலன் அல்லாஹ்விடமுள்ளது. நிச்சயமாக அவன் அநீதி இழைப்பவர்களை நேசிப்பதில்லை. (அஷ்ஷூரா:41)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எவர் ஒருவர் நாம் அவரை நேசிக்க வேண்டும் என்றும், அவருக்கு ஆதரவாக எமது துஆக்கள் துடிப்புடனும் வேதனையுடனும் விண்ணை சென்றடைய வேண்டும் என்றும் விரும்புகின்றாரோ அவர் மார்க்கத்தின் தொண்டராக தான் விளங்குவதற்கு திறன் படைத்துள்ளார் என்று எமக்கு நம்பிக்கையூட்ட வேண்டும்.**

### தனிமையை விரும்புதல்

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் அதிகமாக தனிமையை விரும்பி வந்தார்கள். இது குறித்து அன்னார் கூறினார்கள்: தனித்து இருத்தல் அல்லது சேர்ந்து இருத்தல் இரண்டில் நீ எதனை விரும்புகின்றாய்? என்று இறைவன் எனக்கு அதிகாரம் வழங்கினால், அந்த தூய இறைவனின் மீது ஆணையாக நான் தனிமையை தேர்ந்தெடுத்துக் கொள்வேன். உலகத்தின் மைதானத்தில் அவனே என்னை இழுத்துக் கொண்டு வந்துள்ளான். தனிமையில் எனக்கு கிடைக்கும் இன்பத்தை இறைவனைத் தவிர வேறு எவர் அறிவார்? நான் சுமார் 25 வருடங்கள் வரை தனிமையில் அமர்ந்திருந்தேன். பிரபல்யமான அவையில் நாற்காலியில் அமர வேண்டும் என்று ஒரு நொடிப் பொழுது கூட நான் விரும்பியது கிடையாது. மக்களுடன் கலந்து அமர்வதில் எனக்கு இயற்கையாகவே வெறுப்பு உள்ளது. ஆனால், இறைக் கட்டளையினால் நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளேன். கூறினார்கள்: நான் வெளியில் அமர்ந்திருப்பது அல்லது நடை பயணமாக செல்வது அல்லது மக்களுடன் பேசுவது இவை அனைத்தும் அல்லாஹ்வின் கட்டளையை செயல்படுத்துவதன் அடிப்படையில் அமைந்துள்ளது.

### மார்க்க சேவகர் எமது துஆக்களுக்கு தகுதி படைத்தவர்

இறை உதவிக்கான பணிகளில் ஒருவர் எழுதினால் அல்லது முயற்சி செய்தால் ஹுஸூர் (அலை) அவர்கள் அதற்கு மிகவும் கண்ணியம் வழங்கி வந்தார்கள். அது குறித்து கூறினார்கள்:

ஒருவர் மார்க்க உதவிக்காக ஒரு சொல்லை நமக்கு எடுத்துக் கொடுத்தால் அது முத்துக்கள் மற்றும் மாணிக்க குவியல்களை விட எமக்கு விலை மதிப்பு மிக்கதாக தெரிகின்றது.

எவர் ஒருவர் நாம் அவரை நேசிக்க வேண்டும் என்றும், அவருக்கு ஆதரவாக எமது துஆக்கள் துடிப்புடனும் வேதனையுடனும் விண்ணை சென்றடைய

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்...

**தாயும், தந்தையும் ஒருவரது குழந்தைப் பருவத்தில் அவருக்கு ஆற்றிய தொண்டுகளைப் போன்று பொதுவாக மனிதனால் தனது பெற்றோருக்கு தொண்டாற்ற முடியாது**
**எனவேதான் இறைவா! நீ அவர்கள் மீது கருணை புரிவாயாக! என்று எப்போதும் துஆ செய்து கொண்டிருக்கும் படி இறைவன் கூறியுள்ளான்**
**அப்போதுதான் செயலில் ஏற்பட்ட குறைவு துஆவின் மூலமாக முழுமை பெற முடியும்**

وَاخۡفِضۡ لَہُمَا جَنَاحَ الذُّلِّ مِنَ الرَّحۡمَۃِ وَقُلۡ رَّبِّ ارۡحَمۡہُمَا کَمَا رَبَّیٰنِیۡ صَغِیۡرًا ﴿ؕ۲۵﴾ رَبُّکُمۡ اَعۡلَمُ بِمَا فِیۡ نُفُوۡسِکُمۡ ؕ اِنۡ تَکُوۡنُوۡا صٰلِحِیۡنَ فَاِنَّہٗ کَانَ لِلۡاَوَّابِیۡنَ غَفُوۡرًا ﴿۲۶﴾

பொருள்: கருணை காட்டும் ஆர்வத்துடன் அவர்கள் முன் பணிவாக நடந்து கொள்ளுங்கள். மேலும், (அவர்களுக்காக இறைவனிடம் வேண்டும் போது இவ்வாறு) கூறுவீராக. என் இறைவா! நான் குழந்தையாக இருந்தபோது என்னை வளர்த்தது போல், நீ அவர்களிடம் கருணை காட்டுவாயாக.

உங்கள் இறைவன், உள்ளங்களிலுள்ளவற்றை(யெல்லாம்) நன்கு அறிகின்றான். நீங்கள் நல்லவர்களாக இருந்தால், மீண்டும், மீண்டும் (தன் பக்கம்) திரும்பக் கூடியவர்களை அவன் அதிகமாக மன்னிப்பவனாவான் (என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்). ( பனீ இஸ்ராயீல் :25 -26)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

அவர்களிடம் கருணை காட்டும் ஆர்வத்துடன் நீங்கள் பணிவுடன் நடந்து கொள்ளுங்கள். என் இறைவா! நீ அவர்களிடம் கருணை காட்டுவாயாக. ஏனெனில், அவர்கள் நான் குழந்தையாக இருந்தபோது என்னை பராமரித்தார்கள்.

இந்த நுட்பமான ஒப்புமையில், உமது கரம் எப்போதும் அவர்களுக்கு தொண்டாற்றுவதில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த வசனத்தில் இந்த விஷயமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பொதுவாக, ஒருவரின் தாயும், தந்தையும் அவரது குழந்தைப் பருவத்தில் அவருக்கு ஆற்றிய தொண்டுகளைப் போன்று பொதுவாக மனிதனால் தனது பெற்றோருக்கு தொண்டாற்ற முடியாது. எனவேதான் இறைவா நீ அவர்கள் மீது கருணை புரிவாயாக என்று எப்போதும் துஆ செய்து கொண்டிருக்கும் படி இறைவன்

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்...

## நபிமொழி

### சிறை பிடித்து வைக்கப்பட்ட விலங்கு மரணித்துவிட்டால் தண்டனை

(2365) ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு பெண்ணிற்கு பூனையின் காரணமாக தண்டனை கிடைத்தது. அது பசியினால் சாகும் வரை அதனை அவள் அடைத்து வைத்திருந்தாள். எனவே அந்தப் பெண்மணி அந்த பூனையின் காரணமாக நெருப்பில் நுழைந்தாள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீ அதனை கட்டி வைத்திருந்தாய். அல்லாஹ்வே நன்கறிந்தவன் ஆவான். நீ அதற்கு தீனி போடவுமில்லை. தண்ணீரும் கொடுக்கவுமில்லை. அது நிலத்தில் உள்ள புழு, பூச்சிகளை தின்று (பிழைத்துக்) கொள்ளட்டும் என்று நீ அதனை அவிழ்த்து விடவும் இல்லை என்று அவளிடம் கூறப்பட்டது.

### அல்லாஹ் கியாமத் நாளன்று மூன்று நபர்களை பரிவுடன் பார்க்க மாட்டான்

(2369) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் கியாமத் நாளன்று மூன்று நபர்களுடன் பேசவும் மாட்டான். அவர்களை பரிவுடன் பார்க்கவும் மாட்டான். அதில் ஒருவர், இந்த பொருளுக்கு தற்போது கொடுக்கப்படும் தொகையை விட நான் (கொள்முதல் செய்தபோது) அதிகமாக கொடுத்து வாங்கி வந்தேன் என்று வியாபார பொருட்களை விற்பனை செய்வதற்காக (பொய்) சத்தியம் செய்பவர். அடுத்து, அந்த நபர் அதாவது அஸர் தொழுகைக்குப் பிறகு(மக்கள் கூடும் நேரத்தில்) ஒரு முஸ்லிம் நபருடைய செல்வத்தை அபகரித்துக் கொள்வதற்காகப் பொய் சத்தியம் செய்பவர். மூன்றாம் நபர், (தன் தேவைக்கு மேல்) எஞ்சியிருந்த தண்ணீரை (மக்கள் உபயோகிப்பதைத்) தடுத்து நிறுத்திக் கொண்டவர். உமது கரங்கள் உருவாக்காத, (தேவைக்கு மேல்) எஞ்சிய பொருளை நீர் தடுத்துக் கொண்டது போன்று இன்று நானும் எனது அருளிலிருந்து உன்னைத் தடுக்கின்றேன் என்று அல்லாஹ் கூறுவான்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுல் முஸாக்காத், காதியான் பதிப்பு-2008)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**தூய்மையும், நன்றியுணர்வும் நிறைந்த பத்ர் போர் ஸஹாபிகளான ஹஸ்ரத் அபூலுபாபா பின் அப்தில் முன்ஸிர் (ரலி), ஹஸ்ரத் அபூஸ்ஸய்யாஹ் பின் ஸாபித் பின் நுஃமான் (ரலி), ஹஸ்ரத் அன்ஸஃ (ரலி), ஹஸ்ரத் அபூ மர்ஸத் பின் அபீ மர்ஸத் (ரலி), ஹஸ்ரத் அபூ மர்ஸத் கன்னாஸ் (ரலி), ஹஸ்ரத் ஸலீத் பின் கைஸ் பின் அம்ர் (ரலி), ஹஸ்ரத் முஜஸ்ஸர் பின் ஸியாத் (ரலி), ஹஸ்ரத் ரிஃபாஃ பின் ராஃபி பின் மாலிக் பின் உஜ்லான் (ரலி), ஹஸ்ரத் அபூ உஸைத் பின் மாலிக் ரபீஅஃ (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்தில் அஸத் (ரலி), ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஃ (ரலி) ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானை வலுவூட்டக் கூடிய சில அம்சங்களின் நற்குறிப்புகள்**

**அல்லாஹ்வே! முஹம்மது (ஸல்) எதன் பக்கம் அழைக்கின்றாரோ அது உண்மையென்றால் ஏழு முறையும் அன்னாரின் பெயரிலேயே அம்புகளை வெளிப்படுத்துவாயாக! என்று துஆ செய்து நான் ஏழு முறை அம்புகளை எடுத்தேன். ஏழு முறையும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் பெயரிலேயே அம்பு வெளிப்பட்டது - ஹஸ்ரத் ரிஃபாஃ பின் ராஃபி பின் மாலிக் பின் உஜ்லான் (ரலி)**

**எனது தாயும், தந்தையும் மரணித்துவிட்ட பிறகும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு ஏதேனும் வழிமுறை உள்ளதா? என்று அவர் கேட்டார். அதற்கு, ஆம்! (உள்ளது). அவர்களுக்காக துஆ செய்யுங்கள். மேலும் அவர்களுக்காக பாவமன்னிப்பு வேண்டுங்கள். மேலும், அவர்கள் செய்துள்ள வாக்குறுதிகளை அவர்களுக்கு பிறகு நிறைவேற்றுங்கள். அந்த நாட்களில் அவர்களின் உறவினர்களாக இருப்பவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களை இணைத்து வையுங்கள். அவர்களின் நண்பர்களுக்கு மரியாதை செலுத்துங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 27 ஜனவரி 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **27ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்று ஸஹாபிகளின் நற்குறிப்புகளிலிருந்து சிலவற்றை நான் எடுத்துரைப்பேன். முதலாவது நற்குறிப்பு, ஹஸ்ரத் அபூலுபாபா பின் அப்துல் முன்ஸிர் (ரலி) அவர்களுடையதாகும். அன்னாரைக் குறித்து வேறு சில அறிவிப்புகளும் கிடைத்துள்ளன. அதனையும் நான் எடுத்துரைக்கின்றேன். விளக்கம் முன்னரும் எடுத்துரைக்கப்பட்டுவிட்டது.

அல்லாமா இப்னு அப்தில் பர் தமது அல்இஸ்தீஆப் எனும் நூலில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

وَآخَرُوْنَ اعْتَرَفُوْا بِذُنُوْبِهِمْ خَلَطُوْا عَمَلًا صَالِحًا وَّآخَرَ سَيِّئًا ۭ

(பொருள்) தங்கள் பாவச் செயல்களை ஏற்றுக் கொண்ட வேறு சிலரும் உள்ளனர். இவர்கள் நல்ல செயல்களை வேறு சில தீய செயல்களுடன் கலந்துவிட்டனர். அல்லாஹ் அவர்களுக்கு அருள் செய்துவிடலாம். (சூரா அத்தவ்பா: 102) என்ற வசனத்தைக் குறித்து ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வசனம் அபூலுபாபா மற்றும் அன்னாருடன் ஏழு, எட்டு அல்லது ஒன்பது நபர்களைக் குறித்து இறங்கியது. இந்த சான்றோர்கள் தபூக் போரில் (கலந்து கொள்வதிலிருந்து) பின் தங்கிவிட்டனர். பின்னர் வெட்கட்த்திற்குள்ளானார்கள். மேலும் இறைவனின் சன்னிதானத்தில் தவ்பா செய்தனர். மேலும் தங்களை தாங்களே தூண்களில் கட்டி வைத்துக் கொண்டனர். அவர்களின் நல்ல செயல் என்பது தவ்பா, மேலும் அவர்களுடைய தீய செயல் என்பது ஜிஹாதில் கலந்து கொள்வதிலிருந்து பின் தங்கிவிட்டது ஆகும். (அல்இஸ்தீஆப் ஃபீய் மஃரூஃபத்திஸ் ஸஹாபா, தொகுதி 4, பக்கம் 1741, பெய்ரூத்)

முஜம்மிஃ பின் ஜாரியா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உனைஸ் பின் கதாதஃ (ரலி) அவர்களின் துணைவியாராக ஹஸ்ரத் கன்ஸாஃ பின்த் கிதாம் அவர்கள் இருந்தார்கள். அன்னார் (ரலி) உஹது போர் நாளன்று ஷஹீத் ஆனார்கள். பின்னர் ஹஸ்ரத் கன்ஸாஃ பின்த் கிதாம் (ரலி) அவர்களின் தந்தை முஸைனா கோத்திரத்தைச் சேர்ந்த அன்னாருக்கு பிடிக்காத ஒரு நபருடன் அன்னாரின் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். ஹஸ்ரத் கன்ஸாஃ கிதாம் (ரலி) அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். அப்போது, அன்னார் (ஸல்), அன்னாரின் அந்த நிக்காஹ்வை ரத்து செய்துவிட்டார்கள். அப்போது, ஹஸ்ரத் அபூலுபாபா (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் கன்ஸாஃ (ரலி) அவர்களுடைய திருமணத்தை நடத்தி வைத்தார்கள். அந்த திருமணத்தின் மூலமாக ஹஸ்ரத் ஸாயிப் பின் அபீலுபாபா (ரலி) அவர்கள் பிறந்தார்கள். (மஃரூபத்திஸ் ஸஹாபா லி அபீ நுஅய்ம், தொகுதி 1,பக்கம் 250, உனைஸ் பின் கதாதஃ (ரலி), தாருல் வதன் லில் நஷ்ர்)

அப்துல் ஜப்பார் பின் வர்த் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் இப்னு அபீ முலைகா அவர்களிடமிருந்து இதனை செவியுற்றேன். அன்னார் இவ்வாறு கூறிவந்தார்கள்: அப்துல்லாஹ் பின் அபீ யஸீத் கூறினார். அதாவது, ஹஸ்ரத் அபூலுபாபா எங்களை கடந்து சென்றார். அன்னார் தமது வீட்டிற்கு செல்லும் வரை நாங்கள் அன்னாருடன் இருந்தோம். நாங்களும் அன்னாருடன் வீட்டில் நுழைந்தோம். ஒரு நபர் கிழிந்த, அழுக்கான ஆடைகளில் அமர்ந்திருப்பதை நாங்கள் கண்டோம்.

எவர் திருக்குர்ஆனை அழகிய குரலில் ஓதமாட்டாரோ அவர் எம்மைச் சார்ந்தவர் அல்ல என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன் என்று அவர் கூறியதை நான் கேட்டேன்.

(சுனன் அபீதாவூத், கிதாபுல் வித்ர், ஹதீஸ் எண்: 1471)

அடுத்து ஒரு குறிப்பு உள்ளது. ஹஸ்ரத் அபூஸியாஹ் பின் ஸாபித் நுஃமான் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. அதாவது, ஹஸ்ரத் அபூஸியாஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர் போருக்கு புறப்பட்டார்கள். ஆனால், அன்னாரின் காலில் கல்லின் கூர்மையான பகுதிபட்டு காயமடைந்துவிட்டது. அதன் காரணமாக அன்னார் திரும்பி வந்துவிட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போரில் அன்னாருடைய பங்கையும் சேர்த்துக் கொண்டார்கள்.

(அல்பதாயா வந் நஹாயா, பாகம் 5, பக்கம்

252, கிதாபுல் மகாஸீ, தாருல் ஹிஜ்ர், பெய்ரூத் 1997)

அடுத்து, ஹஸ்ரத் அனஸா மவ்லா (ரலி) அவர்களின் குறிப்பு உள்ளது. ஹஸ்ரத் அனஸாவின் சுட்டுப் பெயர் அபூ மஸ்ரூஹ் ஆகும். வேறு சிலரை பொருத்தவரை அபூ மிஸ்ரஹ் என்றும் கூறப்பட்டுள்ளது. (அல் அஸாபா ஃபீய் தம்மீஸுஸ் ஸஹாபா, தொகுதி1, பக்கம் 283, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், லெப்னான்- 1995)

ஹஸ்ரத் அனஸா (ரலி) ஸராத் எனுமிடத்தில் பிறந்தார்கள். ஸராத் என்பது ஏமன் மற்றும் ஹப்ஷாவிற்கு அருகிலுள்ள ஓர் இடமாகும். (அஸதுல் காபா ஃபீய் மஃரூபத்திஸ் ஸஹாபா, தொகுதி 1, பக்கம் 301, அனஸா, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் ,லெப்னான்) (ரோஷன் ஸித்தாரே, தொகுதி1, பக்கம் 145)

அன்னாருடைய ஹிஜ்ரத் குறித்து இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அதாவது, அன்னார் (ஸல்) மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தபோது அன்னார் ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் பின் ஹிஸாம் (ரலி) அவர்களிடத்தில் தங்கினார்கள். அதேநேரம் வேறு சில அறிவிப்புகளுக்கேற்ப, அன்னார் ஹஸ்ரத் ஸஅத் பின் குஸைமா (ரலி) அவர்களிடத்தில் தங்கினார்கள் என்று வந்துள்ளது. (அத் தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், தொகுதி 3, பக்கம் 35, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், லெப்னான் -1990)

இமாம் ஸஹரீ (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் லுஹருக்கு பிறகு, சந்திக்க வருபவர்களுக்கு சந்திப்பிற்கு அனுமதி நல்கி வந்தார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அந்த மக்களுக்காக ஹஸ்ரத் அனஸா (ரலி) அவர்கள் அனுமதி வாங்கி வந்தார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், தொகுதி 3, பக்கம் 36, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், லெப்னான் -1990)

வீட்டிற்கு சந்திக்க வருபவர்களைப் பற்றிய தகவல் தெரிவிப்பது அன்னாரின் பணியாக இருந்தது.

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ரத் மர்ஸத் பின் அபீ மர்ஸத் அவர்களுடையதாகும். இம்ரான் பின் மன்னாஹ் கூறுகின்றார்கள்: அபூ மர்ஸத் மற்றும் அன்னாருடைய மகன் மர்ஸத் பின் அபீ மர்ஸத் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தபோது, அந்தநேரத்தில் அவர்கள் இருவரும் ஹஸ்ரத் குல்ஸூம் பின் ஹிஸம் (ரலி) அவர்களிடத்தில் தங்கினார்கள். முஹம்மது பின் உமர் கூறுகின்றார்கள்: அன்னார் (ரலி) உஹது போரிலும் பங்கு பெற்றிருந்தார்கள். மேலும் ரஜீஃ போர் நாளன்று அன்னாரின் ஷஹாதத் நிகழ்ந்தது.

(அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், பாகம் 3, பக்கம் 35, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2017)

ஹஸ்ரத் மர்ஸத் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு ஸஃபர் மாதம் நிகழ்ந்தது என்று இப்னு ஹிஜர் அவர்கள் கூறியுள்ளார்கள். (தஹ்ஸீபுத் தஹ்ஸீப், தொகுதி 6, பக்கம் 642, மர்ஸத் பின் அபீ மர்ஸத், தாருல் ஹதீஸ், காஹிரா 2010)

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ரத் அபூ மர்ஸத் கன்னாஸ் பின் அல்ஹூஸைன் (ரலி) அவர்களுடையதாகும். அன்னாரின் தந்தை பெயர் ஹூஸைன் பின் யர்பூஃ ஆகும். அன்னாரின் பெயரைக் குறித்து கருத்து வேறுபாடு காணப்படுகிறது. சிலரின் பார்வையில் அன்னாரின் பெயர் கன்னாஸ் பின் ஹூஸைன் ஆகும். அதேநேரம் வேறு சிலரின் பார்வையில் அன்னாரின் பெயர் ஹூஸைன் பின் கன்னாஸ் ஆகும். அன்னாரின் பெயர் அய்மன் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் மிகவும் பிரபல்யமான பெயர் கன்னாஸ் பின் ஹூஸைன் ஆகும். (அல் அஸாபா ஃபீய் தம்மீஸுஸ் ஸஹாபா லி இப்னி ஹிஜ்ர் அஸ்கலானீ, அபூ மர்ஸத் அல்கன்வீ, பாகம் 7, பக்கம் 305, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் அபூ மர்ஸத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஒத்த வயதுடையவராகவும், தோழராகவும் இருந்தார்கள். அன்னார் (ரலி) உயரமானவராக இருந்தார்கள். மேலும் அன்னாரின் தலை முடி அடர்த்தியாக இருந்தது. (அத்தப்காதுல் குப்ரா, பாகம் 3, பக்கம் 34, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் அபூ மர்ஸத் (ரலி) மற்றும் அன்னாருடைய மகன் ஹஸ்ரத் மர்ஸத் (ரலி) அவர்கள் இருவரும் பத்ர் போரில் கலந்து கொள்ளும் நற்பேறு பெற்றிருந்தார்கள். அன்னாரின் மகன் ஹஸ்ரத் மர்ஸத் ரஜீஃ சம்பவத்தில் ஷஹீத் ஆனார்கள். (அஸதுல் காபா ஃபீய் மஃரூஃபத்திஸ் ஸஹாபா லி இப்னி அஸீர், பாகம் 6, பக்கம் 276- 277, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்) அந்த சம்பவம் முன்னர் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அபூ மர்ஸத் (ரலி) அவர்களின் ஒரு மகன் வழிப்பேரர் ஹஸ்ரத் உனைஸ் பின் மர்ஸத் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபியாக இருந்தார்கள். அன்னார் மக்கா வெற்றி மற்றும் ஹூனைன் போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீய் மஃரூஃபத்திஸ் ஸஹாபா லி இப்னி அஸீர், பாகம் 6, பக்கம் 276- 277, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

கூறப்பட்டுள்ளது: ரபீயுல் அவ்வல் ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முப்பது சவாரிகளை கொண்ட முஹாஜிர்களின் ஒரு குழுவை தமது சிறிய தந்தையார் ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் (ரலி) அவர்களின் தலைமையில் மதீனாவினிலிருந்து கிழக்குப் பக்கம் ஸைஃபுல் பஹ்ர் பகுதியில் இய்ஸ் எனும் இடத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) மற்றும் அன்னாருடைய தோழர்கள் வேக வேகமாக அங்கு சென்றடைந்தார்கள். அங்கு அவர்கள் கண்ட காட்சி என்னவென்றால், மக்காவின் மாபெரும் தலைவன் அபூ ஜஹில் மூன்று சவாரிகளைக் கொண்ட ஒரு படையுடன் அன்னாரை வரவேற்பதற்கு தயாராக இருந்தான். இரண்டு படைகளும் ஒன்று மற்றொன்றுக்கு எதிராக அணி வகுத்து நிற்கத் தொடங்கியது. போர் தொடங்க இருந்தது. அந்நிலையில், இரண்டு பிரிவினர்களுடனும் தொடர்பு வைத்திருந்த அந்தப் பகுதியின் தலைவர் மஜ்தீ பின் அம்ர் அல்ஜூஹன்னீ சண்டையை தடுத்து நிறுத்துவதற்காக இடையில் வந்துவிட்டார். மேலும், மூள இருந்த போர் நின்றுவிட்டது. இந்தப் போர் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப்பின் போர் என்ற பெயரில் மிகவும் பிரபலமானதாகும்.

அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதன் முதலில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்காக கொடி கட்டினார்கள். அந்தப் போரில், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் அந்தக் கொடியை ஹஸ்ரத் அபூ மர்ஸத் (ரலி) அவர்கள் வைத்திருந்தார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், பாகம் 2, பக்கம் 3-4 , தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2017)

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ரத் ஸலீத் பின் கைஸ் பின் அம்ர் (ரலி) அவர்களுடையதாகும். ஹஸ்ரத் ஸலீத் (ரலி) அவர்கள் அன்ஸார் கோத்திரமான கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ அதீ பின் நஜ்ஜாரைச் சார்ந்தவராக இருந்தார்கள். (அஸதுல் காபா ஃபீய் மஃரூபத்திஸ் ஸஹாபா, தொகுதி 2, பக்கம் 538, அனஸா, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், லெப்னான்)

ஹஸ்ரத் ஸலீத் (ரலி) அவர்களின் தாயார் பெயர் ஹஸ்ரத் ஸூகைப்பா பின்த் ஸூராரா (ரலி) ஆகும். அன்னார் ஹஸ்ரத் அஸ்அத் பின் ஸூராரா (ரலி) அவர்களின் சகோதரியாக இருந்தார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், பாகம் 3, பக்கம் 35, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1990)

ஓர் அறிவிப்பில் வந்துள்ளது: ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் சகோதரர் வலீத் பின் வலீத் அவர்களை பத்ர் போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஸலீத் பின் கைஸ் (ரலி) அவர்கள் கைது செய்திருந்தார்கள்.

(இம்தாஉல் அஸ்மாஃ, தொகுதி 6, பக்கம் 248, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், லெப்னான் -1999)

மக்கா வெற்றி சந்தர்ப்பத்தின்போது அன்ஸார் கோத்திரமான பனூ மாஸினுடைய கொடி ஹஸ்ரத் ஸலீத் பின் கைஸ் (ரலி) அவர்கள் வசம் இருந்தது. (இம்தாஉல் அஸ்மாஃ, தொகுதி 6, பக்கம் 168-169, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், லெப்னான் -1999)

அதேபோன்று ஹுனைன் போர் சந்தர்ப்பத்தின்போதும் பனூமாஸினின் கொடி ஹஸ்ரத் ஸலீத் (ரலி) அவர்கள் வசம் இருந்தது. (கிதாபுல் மகாஸீ, தொகுதி 3, பக்கம் 896, ஹுனைன் போர், மக்தபா ஆலமுல் குதுப்)

பதிமூன்றாம் ஹிஜ்ரியில், அதேநேரம் வேறு சிலரை பொருத்தவரை பதினான்காம் ஹிஜ்ரியின் தொடக்கத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஜிஸ்ர் போர் சம்பவம் நிகழ்ந்தது. இந்தப் போர் முஸ்லிம்கள் மற்றும் பாரசீகர்களுக்கிடையில் தற்போதுள்ள ஈராக் பகுதிகளில் நடைபெற்றது. இந்தப் போரில் முஸ்லிம்களின் படைத் தளபதியாக ஹஸ்ரத் அபூ உபைதா பின் மசூத் ஸக்ஃபீ (ரலி) அவர்கள் இருந்தார்கள். எனவே இந்தப் போரை ஜிஸ்ராபீ உபைத் போர் என்றும் கூறுகின்றார்கள். இந்தப் போருக்கு மேலும் பல பெயர்கள் உள்ளன. மர்வஹா போர், (என்ற பெயரும் உள்ளது) அதாவது மர்வஹா என்பது ஃபுராத் நதியின் மேற்கு கரையில் அமைந்துள்ள ஓர் இடத்தின் பெயராகும். அடுத்து, குஸ்ஸூன் நாதிஃப் ஆகும். இதுவும் ஃபராத் நதியின் கிழக்குக் கரையில் கூஃபாவிற்கு அருகில் அமைந்துள்ள ஓர் இடத்தின் பெயராகும். இந்தப் போரில் இரண்டாயிரம் ஈரானியர்கள் கொல்லப்பட்டனர். ஆனால், வேறு சில அறிவிப்புகளின் படி, ஆறாயிரம் ஈரானியர்கள் கொல்லப்பட்டனர். சில அறிவிப்புகளின் படி, இந்தப் போரில் முஸ்லிம்களின் தரப்பில் ஆயிரத்தி எண்ணூறு முஸ்லிம்கள் ஷஹீத் ஆகினர். வேறு சில அறிவிப்புகளின்படி நான்காயிரம் முஸ்லிம்கள் ஷஹீத் ஆகினர். அவர்களில் எழுபது அன்ஸார் சகோதரர்களும், இருபத்திரண்டு முஹாஜிர்களும் அடங்குவர். இந்த ஷஹீத்மார்களில் ஸலீத் பின் கைஸ் அவர்களும் அடங்குவார்கள். சிலரைப் பொருத்தவரை இந்தப் போரில் எல்லாரையும் விட இறுதியில் ஷஹீத் ஆகக் கூடியவர் ஹஸ்ரத் ஸலீத் பின் கைஸ் (ரலி) அவர்களாக இருந்தார்கள். (அல்இக்திஃபாஃ பிமா தஸ்மினா மிம் மகாஸீ ரஸூலுல்லாஹ் வ ஸலாஸத்துல் குலஃபா, தொகுதி 2, பாகம் 2, பக்கம் 124-129, ஆலமுல் குதுப், பெய்ரூத்) (அல்பதாயா வன் நஹாயா லி இப்னி கஸீர், தொகுதி 4, பக்கம் 46, மக்தபதுல் மஆரிஃப், பெய்ரூத்) (முஃஜமுல் பல்தான் தொகுதி 4, பக்கம் 349, தாருஸ் ஸாதிர் பெய்ரூத், லெப்னான்)

சில வரலாற்றாசிரியர்களின் கூற்றிற்கேற்ப அன்னாரின் சந்ததிகள் தொடரவில்லை. ஆனால், வேறு சில அறிவிப்புகளின்படி அன்னாரின் மகன் பெயர் அப்துல்லாஹ் பின் ஸலீத் ஆகும். அவர் அன்னாரிடமிருந்து ஓர் அறிவிப்பும் செய்துள்ளார். மற்றோர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் ஸலீத் (ரலி) அவர்களுக்கு ஒரு மகள் இருந்தார். அவரது பெயர் ஸுபைதா ஆகும். அவர் ஹஸ்ரத் ஸுகைலா பின் ஸிம்மாஃ (ரலி) அவர்களின் வயிற்றில் பிறந்தார்.

அன்னாரின் பிள்ளைகளின் சந்ததிகள் தொடரவில்லை என்று அஸதுல் காபா நூலின் ஆசிரியர் எழுதுகின்றார்.

அப்துல்லாஹ் பின் ஸலீத் பின் கைஸ் தமது தந்தை ஹஸ்ரத் ஸலீத் பின் கைஸ் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அன்ஸார் ஸஹாபிகளில் ஒருவருக்கு ஒரு தோட்டம் இருந்தது. அதில் மற்றொரு அன்ஸாரி சகோதரருடைய பேரீத்தம் பழ மரம் இருந்தது. மேலும், அந்த நபர் காலையிலும், மாலையிலும் தோட்டத்திற்கு வந்து சென்றார். தோட்டத்தின் சுவர்களுக்கு அருகில் உள்ள அந்த மரங்களின் பேரீத்தம் பழங்களை தோட்டத்திற்கு சொந்தக் காரரான அந்த அன்ஸாரி சகோதரருக்கு கொடுத்து வரும் படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

(அஸதுல் காபா ஃபீய் மஃரூஃபத்திஸ் ஸஹாபா லி இப்னி அஸீர், பாகம் 2, பக்கம் 538, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1990)

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ரத் முஜஸ்ஸர் பின் ஸியாத் (ரலி) அவர்களுடையதாகும். மூஸா பின் உக்பா அவர்கள் கூறுகின்றார்கள்: அபூயஸ்ர், அபூபக்தரீயை கொன்றான் என்று மக்களின் கருத்தாகும். முஜஸ்ஸிர் அவனைக் கொன்றுவிட்டார் என்று அதிகமான மக்கள் கூறினர். ஹஸ்ரத் முஜஸ்ஸிர் அறியாமைக் காலத்தில் ஸுவைத் பின் ஸாமிதை கொன்றுவிட்டார். மேலும் அந்தக் கொலை புஆஸ் போர் நடப்பதற்கு காரணமாக அமைந்துவிட்டது. பின்னர் ஹஸ்ரத் முஜஸ்ஸிர் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஸுவைத் பின் ஸாமித் (ரலி) அவர்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். ஆனால், தனது தந்தையைக் கொன்றவரை பழிவாங்குவதற்காக அன்னாரைக் கொல்வதற்கான சந்தர்ப்பத்தை ஹாரிஸ் பின் ஸுவைத் தேடிக் கொண்டிருந்தார். உஹது போரில் குரைஷியர்கள் திரும்பி வந்து முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்த போது, ஹாரிஸ் பின் ஸுவைத் பின்னால் இருந்து அன்னாரின் கழுத்தின் மீது தாக்குதல் நடத்தி அன்னாரை ஷஹீத் ஆக்கிவிட்டார். ஹம்ராஉல் அஸத் போரிலிருந்து திரும்பி வரும்போது ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். மேலும், ஹாரிஸ் பின் ஸுவைத், முஜஸ்ஸிர் பின் ஸியாத் அவர்களை ஏமாற்றிக் கொன்றுவிட்டார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள். மேலும், முஜஸ்ஸிர் பின் ஸியாத் அவர்களுக்கு பகரமாக ஹாரிஸ் பின் ஸுவைதை கொன்றுவிடுங்கள் என்ற கட்டளையை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கினார்கள். குபாவில் கடுமையான வெப்பம் இருந்த தினத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு சென்றிருந்தார்கள். ஹஸ்ரத் உவைம் பின் ஸாஇதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப மஸ்ஜித் குபாவின் வாசலில் ஹாரிஸ் பின் ஸுவைதை கொன்றுவிட்டார்கள். இது அநேகமாக தப்காதுல் குப்ராவின் அறிவிப்பாகும். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், பாகம் 3, பக்கம் 283, பெய்ரூத் 1996)

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ரத் ரிஃபாஃ பின் ராஃபிஃ பின் மாலிக் பின் உஜ்லான் (ரலி) அவர்களுடையதாகும். எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரிஃபாஃ பின் ராஃபிஃ (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அதாவது முஆஸ் பின் ரிஃபாஃ தமது தந்தையாரிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரிஃபாஃ பின் ராஃபிஃ (ரலி) அவர்கள் தமது சிற்றன்னை வழிச் சகோதரர் ஹஸ்ரத் முஆஸ் பின் அஃப்ராஃ (ரலி) அவர்களுடன் புறப்பட்டார்கள். புனித மக்காவை சென்றடைந்தனர். இருவரும் ஸன்னிய்யா மலையிலிருந்து கீழே இறங்கினார்கள். அப்போது, ஒரு நபர் மரத்தின் கீழ் அமர்ந்திருப்பதை அன்னார் கண்டார்கள். அறிவிப்பாளரின் கூற்றின்படி, இந்த சம்பவம் ஆறு அன்சாரி சகோதரர்கள் புறப்படுவதற்கு முன்னர் நிகழ்ந்ததாகும். அதாவது, முதலாவது உக்பா பைஅத் நடைபெறுவதற்கு முன்னர் நிகழ்ந்த சம்பவம் ஆகும். கூறுகின்றார்கள்: நாங்கள் அறிவீன காலகட்டத்தில் இருந்த வழக்கப்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினோம். ஆனால், அன்னார் (ஸல்) இஸ்லாமிய வழிமுறையின்படி பதிலளித்தார்கள்.

கூறுகின்றார்கள்: மக்காவில் ஒருவர் வாதம் செய்துள்ளார் என்று நாங்கள் நபியைப் பற்றி செவியுற்றுவிட்டோம். ஆனால் நாங்கள் அன்னாரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

தாங்கள் யார்? என்று நாங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டோம். அதற்கு, கீழே இறங்கி வாருங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்)

அவர்கள் கூறினார்கள். எனவே, நாங்கள் கீழே இறங்கிச் சென்றோம். நபித்துவ வாதம் செய்யும் அந்த நபர் யார் ? என்று நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டோம். அதற்கு, நானே அந்த நபர் ஆவேன் என்று ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பின்னர், கூறுகின்றார்கள்: எனக்கு இஸ்லாத்தைப் பற்றிக் கூறுங்கள் என்று நான் கேட்டேன். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி கூறினார்கள். வானங்கள், பூமி மற்றும் மலைகளை யார் படைத்தார்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ் படைத்தான் என்று நாங்கள் கூறினோம். நீங்கள் வணங்குகின்ற இந்த சிலையை யார் படைத்தது? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். நாங்கள் தான் படைத்தோம் என்று நாங்கள் கூறினோம். அப்படியென்றால், படைத்தவனுக்கு அதிக உரிமை உள்ளதா? அல்லது எவர்கள் படைக்கப்பட்டுள்ளார்களோ அவர்களுக்கு அதிக உரிமை உள்ளதா?. (படைக்கப்பட்டவருக்கே அதிக உரிமை உள்ளதென்றால்) அந்நிலையில் வணங்கப்படுவதற்கு நீங்கள் அதிகம் தகுதி படைத்தவர்கள் ஆகிவிடுவீர்கள். ஏனெனில், நீங்களே இந்த சிலைகளை வடித்துள்ளீர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பின்னர், அன்னார் (ஸல்) கூறினார்கள்: நான் அல்லாஹ்வை வணங்குவதன் பக்கம் உங்களை அழைக்கின்றேன். மேலும், அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனுமில்லை; மேலும் நான் அல்லாஹ்வின் தூதர் ஆவேன் என்பதற்கு சாட்சியம் வழங்குவதன் பக்கம் நான் உங்களை அழைக்கின்றேன். மேலும், தங்களுக்குள் பரஸ்பரம் நல்ல முறையில் நடந்து கொள்வது மற்றும் மக்களின் அநீதிகளின் காரணமாக உருவான பகைமையை கைவிடுவது ஆகியவற்றின் பக்கம் நான் உங்களை அழைக்கின்றேன்.

அதற்கு நாங்கள் கூறினோம்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்கள் எந்த விஷயங்களின் பக்கம் அழைக்கின்றீர்களோ அவை பொய்யாக ஆகிவிட்டாலும் கூட அவை சிறந்த விஷயங்களும், உயர்ந்த நல்லொழுக்கங்களும் ஆகும். நாங்கள் தவாஃப் செய்து விட்டு வரும் வரை தாங்கள் (ஸல்) எங்களது சவாரிகளை நிர்வகித்துக் கொள்ளவும்.

முஆஸ் பின் அஃப்ராஃ அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனேயே அமர்ந்திருந்தார்கள்.

ரிஃபாஃ பின் ராஃபிஃ கூறுகின்றார்கள்: ஆக, நான் பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்வதற்காக சென்றேன். நான் ஏழு அம்புகளை எடுத்தேன். ஒவ்வொரு அம்பையும் எங்களது வழிமுறைக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காகவே நிர்ணயித்துக் கொண்டேன்.

உள்ளத்தின் ஆறுதலுக்காக அவர்கள் இந்த அம்புகளைக் கொண்டு சகுனம் பார்த்து வந்தனர்.

கூறுகின்றார்கள்: பின்னர் பைத்துல்லாஹ்வின் பக்கம் முகம் திருப்பினேன். மேலும், அல்லாஹ்வே! முஹம்மது (ஸல்) எந்த விஷயத்தின் பக்கம் அழைக்கின்றார்களோ அவை உண்மையென்றால், ஏழு முறையும் அன்னாருடைய அம்புகளையே வெளிப்படச் செய்வாயாக என்று நான் துஆ செய்தேன். நான் ஏழு முறை சீட்டுக் குலுக்கிப் போட்டேன். ஏழு முறையும் அன்னாரின் பெயரிலேயே அம்பு வெளிப்பட்டது.

அப்போது நான்

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰهِ

என்று சப்தமாகக் கூறினேன். எனவே மக்கள் எனக்கு அருகில் ஒன்றுகூடிவிட்டனர். மேலும், இந்த நபர் பைத்தியம் ஆவார். இவர் ஸாபி ஆகிவிட்டார் என்று கூறத் தொடங்கினர். அதற்கு அவர் நம்பிக்கை கொண்ட மனிதர் ஆவார் என்று நான் கூறினேன். அதாவது, இவர் பைத்தியக்காரர் மற்றும் ஸாபி என்று அவரைக் குறித்து நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால், இல்லை என்று நான் கூறினேன். இன்னும் கூறப்போனால், அவர் நம்பிக்கைக் கொண்ட மனிதர் ஆவார் என்றே எனக்கு தோன்றுகின்றது. பின்னர், நான் மக்காவின் மேல் பகுதிக்கு சென்றுவிட்டேன்.

ஆக, முஆஸ் அவர்கள் என்னைக் கண்டபோது, ரிஃபாஃ சென்றபோது இல்லாத ஒளிமயமான முகத்துடன் வந்து கொண்டிருக்கின்றார் என்று கூறினார்கள். அதாவது, கலிமா ஓதுவதற்கு முன்னர் தற்போது இருப்பதை போன்று அந்த முகம் ஒளிமயமானதாக இருக்கவில்லை.

ஆக, நான் (திரும்பி) வந்தேன். வந்து இஸ்லாத்தை ஒப்புக் கொண்டேன். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எங்களுக்கு சூரா யூசுஃப் மற்றும்

اِقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِیْ خَلَقَ

வசனத்தை கற்றுக் கொடுத்தார்கள். பின்னர் நாங்கள் திரும்பிச் சென்றுவிட்டோம்.

(அல்முஸதத்ரக் அலஸ் ஸஹீஹைன், தொகுதி 4, பக்கம் 165-166, பதிப்பு தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2002)

ஹஸ்ரத் ரிஃபாஃ பின் ராஃபிஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பத்ர் போர் நாளன்று எனது கண்ணில் அம்பு பாய்ந்தது. அதன் காரணமாக எனது கண் உடைந்துவிட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது கண்ணில் தமது உமிழ்நீரை தடவினார்கள். மேலும் எனக்காக துஆ செய்தார்கள். அதனால் எனக்கு எந்த வேதனையும் ஏற்படவில்லை. (ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 4, பக்கம் 53, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1993)

மற்றோர் அறிவிப்பிற்கேற்ப, பத்ர் போர் நாளன்று அம்பு ஹஸ்ரத் ரிஃபாஃ பின் ராஃபிஃ (ரலி) அவர்களை அல்ல மாறாக, அன்னாருடைய தந்தை ராஃபிஃ பின் மாலிக் அவர்களின் கண்ணில் பாய்ந்தது. (அல் முஸ்தத்ரக் அலா ஸஹீஹைன், பக்கம் 1876, ஹதீஸ் எண்: 5024)

எவ்வாறு இருப்பினும், அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால், துன்பம் அகன்றது என்பதே எவ்வாறு இருப்பினும் விளைவாக இருந்தது.

ஹஸ்ரத் ரிஃபாஃ பின் ராஃபிஃ கூறுகின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஒருநாள் மஸ்ஜிதில் அமர்ந்திருந்தார்கள். நாங்களும் அன்னாருடன் அமர்ந்திருந்தோம். இதற்கிடையில் ஒரு நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். மேலும் அவர் காட்டரபியைப் போன்று தென்பட்டார். அவர் வந்து தொழுதார். மிகவும் விரைவாக தொழுதார். பின்னர் திரும்பினார். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினார். அப்போது, உம் மீதும் ஸலாம் உண்டாகட்டுமாக. திரும்பிச் செல்லுங்கள். மீண்டும் தொழுங்கள். ஏனெனில், நீர் தொழவில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் திரும்பிச் சென்றார். மேலும் தொழுதார். பின்னர், அவர் மீண்டும் வந்தார். திரும்பி வந்து அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினார். உம் மீதும் ஸலாம் உண்டாகட்டுமாக என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். மேலும், நீர் திரும்பிச் செல்லும்; தொழுகையை நிறைவேற்றும். ஏனெனில் நீர் தொழவில்லை என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். இவ்வாறு இரண்டு அல்லது மூன்று முறை நிகழ்ந்தது. ஒவ்வொரு முறையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அந்த நபர் ஸலாம் கூறுவார். அதற்கு, உம் மீதும் ஸலாம் உண்டாகட்டுமாக! நீர் திரும்பிச் சென்று தொழுகையை நிறைவேற்றும். ஏனெனில் நீர் தொழவில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு முறையும் கூறுவார்கள்.

அப்போது மக்கள் அஞ்சினர். மேலும், எவர் விரைவாக தொழுவாரோ அவர் தொழுகையை நிறைவேற்றவேயில்லை என்ற அச்சம் அந்த மக்களுக்கு ஏற்பட்டது. அங்கு

அமர்ந்திருந்த ஸஹாபா பெருமக்கள் பெரும் அச்சத்தை உணர்ந்தனர். அதாவது அதன் பொருள் என்னவென்றால், (அதி) விரைவாக தொழப்படும் தொழுகைகள் தொழுகைகளாகவே அமையாது.

நாமும் இந்த அடிப்படையில் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

இறுதியில், தாங்கள் எங்களுக்கு தொழுது காட்டுங்கள். மேலும், எனக்கு கற்றுக் கொடுங்கள் என்று அந்த நபர் கேட்டுக் கொண்டார். நான் மனிதன் தானே. நானும் சரியானதையும் செய்கிறேன். (சிலநேரம்) நான் தவறிழைத்தும் விடுகிறேன் என்று அவர் கூறினார். அப்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆகட்டும். நீர் தொழுகைக்காக நிற்பதற்கு எண்ணம் கொள்ளும்போது அல்லாஹ் உமக்கு உளூ செய்வதற்கு கட்டளை வழங்கியிருப்பதைப் போன்று முதலில் உளூ செய்து கொள்வீராக. பின்னர், திருக்குர்ஆனின் சில பகுதிகள் உமக்கு நினைவில் இருந்தால் அதனை ஓதுவீராக. இல்லையென்றால் அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர் மற்றும் லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவீராக. பின்னர், ருகூ செய்வீராக. நன்றாக மனநிறைவு ஏற்படும் வரை ருகூ செய்வீராக. அதன் பிறகு, முற்றிலும் நேராக நிற்பீராக. பின்னர் ஸஜ்தா செய்வீராக. மிகவும் நடுநிலையுடன் ஸஜ்தா செய்வீராக. பின்னர் அமர்வீராக. மேலும் நன்றாக மனநிறைவு ஏற்படும் வரை அமர்வீராக. பின்னர் எழுவீராக. நீர் அவ்வாறு செய்துவிடும்போது, உமது தொழுகை முழுமையடைந்துவிடும். ஒருவேளை நீர் அவ்வாறு செய்வதில் சில குறைவு செய்தால் பின்னர் உமது தொழுகையில் அதே அளவிற்கு குறைவு ஏற்படுத்திவிட்டீர் என்று பொருள். (சுனன் இப்னு மாஜா, கிதாபுத் தஹாரத், ஹதீஸ் எண்: 302)

ஹஸ்ரத் ரிஃபாஃ பின் ராஃபிஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தேன். அப்போது, ஒருவர் அல்லாஹ் வழங்கிய கட்டளைக்கேற்ப முழுமையாக உளூ செய்யாத வரை அவருடைய தொழுகை முழுமையடைவதில்லை. தமது முகம், மற்றும் இரண்டு கைகளின் மணிக்கட்டு வரை கழுவ வேண்டும். மேலும், தனது தலையை தடவ வேண்டும். மேலும், தமது இரண்டு கால்களையும் கரண்டை வரை கழுவ வேண்டும்.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுத் தஹாரத், ஹதீஸ் எண்: 460)

மற்றோர் அறிவிப்பில் ஹஸ்ரத் ரிஃபாஃ பின் ராஃபிஃ (ரலி) அவர்களிடமிருந்து இந்த சம்பவத்திற்கான அறிவிப்பு கிடைக்கின்றது. அதாவது அன்னார் கூறினார்கள்: அதாவது, நீர் எழுந்து நின்று கிப்லாவின் பக்கம் முகம் திருப்பும்போது அல்லாஹு அக்பர் என்று கூறவும். பின்னர், சூரா ஃபாத்திஹாவை ஓதவும். மேலும் அத்துடன் திருக்குர்ஆனிலிருந்து அல்லாஹ் விரும்பிய அளவு மறறும் நீர் அறிந்த அளவிற்கு அல்லது நீர் எவ்வளவு ஓத விரும்புகின்றீரோ அதனை நீர் ஓதவும். நீர் ருகூ செய்யும்போது உமது இரண்டு உள்ளங்கைகளையும் உமது இரண்டு முட்டுகளின் மீது வைக்கவும். மேலும் உமது இடுப்பை நேராக வைக்கவும். மேலும், நீர் ஸஜ்தா செய்யும்போது மன நிறைவுடன் ஸஜ்தா செய்யவும். மேலும், நீர் தலையை உயர்த்தும்போது நீர் உமது இடது தொடையில் அமரவும். (சுனன் இப்னு மாஜா, கிதாபுஸ் ஸலாத், ஹதீஸ் எண்: 859)

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ரத் அபூ உஸைத் மாலிக் பின் ரபீஅஃ (ரலி) அவர்களுடையதாகும். உஸ்மான் பின் உபைதுல்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அபூ உஸைத் அவர்கள் தமது தாடியில் சாயம் பூசி வந்ததை நான் கண்டுள்ளேன். (அத்தப்காதுல் குப்ரா, பாகம் 3, பக்கம் 421, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2017)

இப்னு இஸ்ஹாக் அறிவிக்கின்றார்கள்: அபூ உஸைத் மாலிக் பின் ரபீஆஃ (ரலி) அவர்கள் பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டிருந்தார்கள். அன்னாருடைய இறுதிகால வயதில் பார்வையை இழந்துவிட்ட போது, இன்று நான் பத்ர் (போர்) நிகழ்விடத்தில் இருந்து, எனது பார்வையும் சரியாக இருந்ததென்றால் நான் உமக்கு வானவர்கள் புறப்பட்டு வந்த அந்தப் பள்ளத்தாக்கை காட்டுவேன். அதில் எனக்கு சிறிதும் சந்தேகமும், ஐயமும் இல்லை. (அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷாம், பக்கம் 431, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2001)

அபூ உஸைத் மாலிக் பின் ரபீஆஃ ஸாஇதி (ரலி) அவர்களிடமிருந்து அறிவிப்பு கிடைக்கின்றது. அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தோம். அப்போது பனூ ஸலமா கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! **எனது தாயும், தந்தையும் மரணித்துவிட்ட பிறகும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதற்கு ஏதேனும் வழிமுறை உள்ளதா? என்று அவர் கேட்டார். அதற்கு, ஆம்! (உள்ளது). அவர்களுக்காக துஆ செய்யுங்கள். மேலும் அவர்களுக்காக பாவமன்னிப்பு வேண்டுங்கள். மேலும், அவர்கள் செய்துள்ள வாக்குறுதிகளை அவர்களுக்கு பிறகு நிறைவேற்றுங்கள். அந்த நாட்களில் அவர்களின் உறவினர்களாக இருப்பவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களை இணைத்து வையுங்கள். அவர்களின் நண்பர்களுக்கு மரியாதை செலுத்துங்கள்** என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனன் அபு தாவூத், கிதாபுல் அதப், ஹதீஸ் எண்: 5142)

இவ்வாறு அவர்களுக்கும் நற்கூலி கிடைத்து வரும். அவர்களின் ஆன்மாவிற்கும் நற்கூலி கிடைத்துக் கொண்டிருக்கும். அவர்களின் பாவமன்னிப்பிற்கான ஏற்பாடுகளும் நிகழ்ந்து கொண்டிருக்கும்.

மாலிக் பின் ரபீஆஃ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வே! தலையை வழித்துக் கொள்பவர்களுக்கு பாவமன்னிப்பு வழங்குவாயாக! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன். அப்போது, முடியை வெட்டிக் கொள்ளும் ஒருவருக்கு என்ன? என்று கேட்டார். அப்போது, மூன்று அல்லது நான்காவது முறை (கேட்டபோது), முடியை வெட்டிக் கொள்பவர்களுக்கும் (பாவ மன்னிப்பு வழங்குவானாக) என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அந்த நாட்களில் நானும் தலைமுடியை வழித்திருந்தேன். அதனால் எனக்கு சிவப்பு நிற ஒட்டகம் அல்லது அதிகமான செல்வம் கிடைப்பதால் ஏற்படாத மகிழ்ச்சி கிடைத்தது. (அத்தப்காதுல் குப்ரா, பாகம் 3, பக்கம் 79-80, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

உஸ்மான் பின் அர்கம் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர்ப் போர் நாளன்று, உங்களிடம் உள்ள போர் செல்வங்களை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். அப்போது, ஹஸ்ரத் அபூ உஸைத்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அஸ்ஸாஇதீ (ரலி) அவர்கள் ஆயிஸுல் மர்ஸ்பானுடைய வாளை வைத்துவிட்டார்கள். அப்போது அதனை ஹஸ்ரத் அர்கம் (ரலி) அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு இதனை கொடுத்து விடுங்கள் என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு அதனை கொடுத்துவிட்டார்கள். (மஃரூஃபத்திஸ் ஸஹாபா லிஅபீ நயீம், தொகுதி 1, பக்கம் 295, ஹதீஸ் எண்: 1022, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் 2002)

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்தில் அஸத் அவர்களுடையதாகும். ஓர் அறிவிப்பில் வருகிறது. முஹம்மது பின் உம்மாரா கூறுகின்றார்கள்: மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து வரக்கூடியவர்களில் முதன் முதலில் எங்களிடத்தில் ஹஸ்ரத் அபூ ஸலமா பின் அப்தில் அஸத் வருகை தந்தார்கள். அன்னார் முஹர்ரம் மாதம் பத்தாம் நாளன்று வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரபீயுல் அவ்வல் 12 ஆம் நாளன்று மதீனாவிற்கு வருகை தந்தார்கள். முதன் முதலில் வருகை தந்து பனூ அம்ர் பின் அஃப் அவர்களிடம் தங்கிய முஹாஜிர்களுக்கும் இறுதியாக வந்த முஹாஜிர்களுக்கும் இடையில் இரண்டு மாதங்களுக்கான இடைவெளி உள்ளது.

ஹஸ்ரத் உம்மே ஸலமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தபோது கபாவில் ஹஸ்ரத் முபஷ்ஷிர் பின் அப்தில் முன்ஸிர் (ரலி) அவர்களிடம் தங்கினார்கள். ஹஸ்ரத் அபூ ஸலமா பின் அப்தில் அஸத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸஃத் பின் கஸீமா ஆகியோருக்கிடையில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

(அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், பாகம் 3, பக்கம் 181, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

குவைலதின் மகன் துலைஹாவும், ஸலமாவும் தமது சமுதாயம் மற்றும் நண்பர்களுக்கு மத்தியில் சுற்றி வருகின்றனர். மேலும் தமது சமுதாயத்தையும், அந்த மக்களையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கெதிராக தூண்டிவிட்டு போர் புரிவதற்கு தயார் செய்து வருகின்றனர் என்ற செய்தியை பனூ தே கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு நபர் தமது மருமகளை சந்திப்பதற்காக மதீனா வந்திருந்தபோது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கொடுத்தார். எனவே, ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸது (ரலி) அவர்களை அழைத்து பனூ அஸதை அடக்குவதற்காக நூற்றி ஐம்பது முஹாஜிர்கள் மற்றும் அன்சாரிகளை அன்னாரின் தலைமையில் அனுப்பி வைத்தார்கள். அவர்களிடம், ஒரு கொடியை தயார் செய்து கொடுத்தார்கள். மேலும், எந்த நபர் பனூ அஸதைக் குறித்து இந்த தகவலை வழங்கினாரோ அவரை வழிகாட்டியாக நியமித்து அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள்.

நீங்கள் முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். எந்த அளவுக்கு என்றால், பனூ அஸதினுடைய பகுதிகளில் சென்று முகாமிட்டு விடுங்கள். மேலும், அவர்கள் தமது படையுடன் உங்களை எதிர்கொள்வதற்கு முன் நீங்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்திவிடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்களுக்கு கட்டளை வழங்கியவாறு கூறினார்கள்.

ஆக, இந்தக் கட்டளையின்படி ஹஸ்ரத் அபூஸலமா (ரலி) அவர்கள் மிகவும் வேகமாக இரவு, பகலாக பயணம் செய்தவாறு பொதுவான வழிப் பாதையை விட்டு விலகிச் சென்றார்கள். பனூ அஸதிற்கு தங்களது முன்னெடுப்புகளைப் பற்றிய செய்தி கிடைப்பதற்கு முன் அவர்களின் தலைமாட்டில் சென்று நின்று விட வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். இறுதியில், பயணம் செய்து பயணம் செய்து, பனூ அஸதினுடைய ஒரு நீரூற்றினை சென்றடைந்து விட்டார்கள். கால்நடைப் பண்ணைகளின் மீது அவர்கள் தாக்குதல் நடத்தினர். மேலும், அவர்களின் மூன்று கால்நடை மேய்ப்பர்களை கைது செய்துவிட்டனர். மற்ற அனைத்து நபர்களும் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு தப்பி ஓடுவதில் வெற்றி பெற்று விட்டனர். ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்கள் தமது படையை மூன்று பகுதிகளில் பிரித்தார்கள். ஒரு பகுதியை தம்முடன் வைத்துக் கொண்டு மீதமிருந்த இரண்டு பிரிவுகளை இங்கும் அங்கும் அனுப்பி வைத்தார்கள். அந்த மக்கள் மேலும் சில ஒட்டகங்களையும், ஆடுகளையும் பிடித்துக் கொண்டு வந்தனர். ஆயினும், எந்த நபரையும் கைது செய்ய முடியவில்லை. அதன் பிறகு, ஹஸ்ரத் அபூஸலமா (ரலி) அவர்கள் மதீனாவிற்கு திரும்பி வந்துவிட்டார்கள். இது ஸீரத்துல் ஹல்பியாவின் சான்றாகும்.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, பாகம் 3, பக்கம் 231, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2002)

அம்ர் பின் அபூ ஸலமா கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூஸலமா (ரலி) பத்ர் போர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொண்டிருந்தார்கள். மேலும், அபூ உஸாமா ஜுஷமீ என்பவன் உஹது போரில் அன்னாரைக் காயப்படுத்தினான். அவன் ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்களின் கரத்தை ஈட்டியினால் தாக்கினான். ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்கள் ஒரு மாதம் வரை அந்த காயத்திற்கு சிகிச்சை செய்து வந்தார்கள். அந்தக் காயம் வெளிப்படையில் குணமாகியிருந்தது. காயம் உள்ளுக்குள் ஆறாமல் இருந்தது. அதன் சீர்கேட்டை எவராலும் அடையாளம் காண முடியவில்லை. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தின் முப்பத்தி ஐந்தாவது மாதமான முஹர்ரம் மாதத்தில் அன்னாரை ஒரு போரில் கதன் என்ற இடத்திற்கு பனூ அஸதை நோக்கி அனுப்பி வைத்தார்கள். கதன் என்பதைக் குறித்து கூறுகின்றனர்: அது அன்யிஸா (நஜத்) மற்றும் கைபருக்கு நடுவில் அமைந்துள்ள ஒரு மலையாகும். அதன் வடக்கில் பனூ அஸத் பின் கஸீமா கோத்திரம் வசித்து வந்தது.

எவ்வாறு இருப்பினும், அவர்கள் பத்திற்கும் அதிகமான இரவுகள் மதீனாவிற்கு வெளியில் தங்கிய பிறகு திரும்பி வந்தார்கள். அப்போது,அன்னாரின் அந்தக் காயம் மோசமடைந்துவிட்டது. அன்னார் நோயுற்றுவிட்டார்கள். மேலும் ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு, ஜமாதில் ஆகிர் மாதம் மரணமடைந்துவிட்டார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், பாகம் 3, பக்கம் 182, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

அபூகிலாபாஃ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ ஸலமா பின் அப்தில் அஸத் அவர்களிடம் நலம் விசாரிப்பதற்காக வருகை தந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்த உடனயே அன்னாரின் ஆன்மா பிரிந்து சென்றது.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அதனால் அங்கிருந்த பெண்கள் ஏதோ கூறியபோது, நிறுத்துங்கள்! உங்கள் உயிருக்கு நன்மையானதைத் தவிர வேறு எந்த துஆவும் செய்யாதீர்கள். ஏனெனில் வானவர்கள் மய்யத்திற்கு அருகில் அல்லது மய்யத்தின் குடும்பத்தினருக்கு அருகில் இருக்கின்றனர். உங்களின் துஆவிற்கு ஆமீன் என்று வானவர்கள் கூறுகின்றனர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எனவே, நன்மையானதைத் தவிர வேறு எந்தத் துஆவும் செய்யாதீர்கள். இவ்வாறு அழுது, மார்பில் அடிப்பதை நமது இடங்களில் ஒப்பாரி வைப்பது என்றும் கூறுவார்கள். அது போன்ற விஷயங்கள் செய்யக் கூடாது.

பின்னர் கூறினார்கள்: அல்லாஹ்வே! அவருக்காக அவருடைய மண்ணறையை விசாலமாக்குவாயாக! மேலும், அவருக்கு அதனை ஒளிமயமாக்கிவிடுவாயாக! அன்னாரின் ஒளியை அதிகரித்துவிடுவாயாக! மேலும் அன்னாரின் பாவங்களை மன்னித்துவிடுவாயாக!

அல்லாஹ்வே! அன்னாரின் அந்தஸ்தை நேர்வழி பெற்ற மக்களுக்கு மத்தியில் உயர்த்தி விடுவாயாக! அன்னாரின் குடும்பத்தினர்களுக்கு நீ

அன்னாரின் பிரதிநிதியாகிவிடுவாயாக! ரப்புல் ஆலமீனே ! எங்களையும், அவரையும் மன்னித்துவிடுவாயாக!

பின்னர் கூறினார்கள்: ஆன்மா வெளியேறும் போது பார்வை அதன் பின்னாலேயே இருக்கின்றது. நீங்கள் அவரது கண்கள் திறந்திருப்பதை பார்க்கவில்லையா?

(அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், பாகம் 3, பக்கம் 183, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ரத் கல்லாத் பின் ராஃபிஃ அஸ்ஸுரகீ (ரலி) அவர்களுடையதாகும். அன்னார் அன்ஸாரி ஸஹாபியாக இருந்தார். ஹஸ்ரத் கல்லாத் பின் ராஃபிஃ (ரலி) அவர்கள் அன்ஸார் கோத்திரமான பனூ கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான அஜலானைச் சார்ந்தவராக இருந்தார்கள். (ஸீரத் இப்னு ஹிஷாம், பக்கம் 472, தாருல் குதுபில் இல்மியா, பதிப்பு பெய்ரூத் 2001)

அன்னாரின் தாயார் பெயர் உம்மே மாலிக் பின் உபீ பின் மாலிக் ஆகும். ஹஸ்ரத் கல்லாத் (ரலி) அவர்களின் மகனின் பெயர் யஹ்யா ஆகும். அன்னார் உம்மே ராஃபிஃ பின்த் உஸ்மான் பின் கல்தாஃ அவர்களின் வயிற்றில் பிறந்தார்கள். அன்னாருடைய அனைத்து பிள்ளைகளும் தொடக்கத்திலேயே மரணமடைந்துவிட்டார்கள் என்றே எழுதப்பட்டுள்ளது.

(அத்தப்காதுல் குப்ரா, பாகம் 3, பக்கம் 447, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1990)

தொழுகையை நிறைவேற்றுவது குறித்த ஓர் அறிவிப்பில் எடுத்துரைக்கப்பட்டுவிட்டது போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று முறை ஒரு நபரை மீண்டும் தொழும்படி கூறினார்கள்.

ஸஹீஹ் புகாரியில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்கு வருகை தந்தார்கள். அப்போது, ஒரு நபர் வந்தார். மேலும் அவர் தொழுதார். பின்னர் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறினார். அன்னார் (ஸல்) அவருக்கு பதில் கூறினார்கள். மேலும், திரும்பிச் சென்று மீண்டும் தொழும்படி அன்னார் (ஸல்) அவரிடம் கூறினார்கள். அப்படியே அவரை திருப்பி அனுப்பினார்கள். பின்னர், மீண்டும் அவரை திருப்பி அனுப்பினார்கள். ஏற்கனவே கூறப்பட்டு விட்டது போன்று அப்போதும், திரும்பி சென்று மீண்டும் தொழுகை நிறைவேற்றுங்கள் என்றே அன்னார் (ஸல்) கூறினார்கள்.

பின்னர் அந்த நபர் கூறினார்: தங்களை உண்மையுடன் அனுப்பியுள்ள அந்த இறைவன் மீது ஆணையாக! என்னால் இதை விட அழகிய முறையில் தொழ முடியாது. எனவே தாங்களே எனக்கு கற்றுக் கொடுங்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் தொழுகைக்காக நிற்கும்போது அல்லாஹு அக்பர் என்று கூறுங்கள். பின்னர் திருக்குர்ஆனிலிருந்து எவ்வளவு முடியுமோ அதனை ஓதுங்கள். அதாவது சூரா ஃபாத்திஹாவிற்கு பிறகு இயன்றதை ஓதுங்கள். பின்னர் ருகூ செய்யுங்கள். எந்த அளவுக்கு என்றால் உங்களுக்கு ருகூவில் மன நிறைவு ஏற்பட வேண்டும். பின்னர் தலையை உயர்த்துங்கள் எந்த அளவிற்கு என்றால் மன நிறைவுடன் நின்றுவிடுங்கள். பின்னர் ஸஜ்தா செய்யுங்கள். எந்த அளவுக்கு என்றால் உங்களுக்கு ஸஜ்தாவில் மன நிறைவு ஏற்பட்டுவிட வேண்டும். பின்னர் தலையை உயர்த்துங்கள் எந்த அளவுக்கு என்றால், மன நிறைவுடன் அமர்ந்து கொள்ளுங்கள். சுருக்கமாக, உங்களது முழுத் தொழுகையையும் இவ்வாறு நிறைவேற்றுங்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் அதான், ஹதீஸ் 757)

அல்லாமா இப்னு ஹிஜ்ர் அஸ்கலானி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

எந்த நபருடன் இந்த சம்பவம் நிகழ்ந்ததோ அவர் ஹஸ்ரத் கல்லாத் பின் ராஃபிஸ் (ரலி) அவர்களாக இருந்தார்கள். (மிர்காதுல் மஃபாதீஹ், ஷரஹ் மிஷ்காதுல் மஸாபீஹ், பாகம் 2, பக்கம் 458, ஹதீஸ் எண்: 790, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2001)

அடுத்து, ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு உள்ளது. அகழ்ப் போர் சந்தர்ப்பத்திலும் ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்களுக்கு முழுமையாக தொண்டாற்றுவதற்கு நற்பேறு கிடைத்தது. ஆக, ஹஸ்ரத் உம்மே ஸலமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் அகழ்ப் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். எந்தவோர் இடத்திலும் அன்னாரை விட்டு பிரியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே அகழின் மேற்பார்வையை செய்து வந்தார்கள். நாங்கள் கடுங்குளிரில் இருந்தோம். நான் அன்னாரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அன்னார் எழுந்தார்கள். மேலும் அல்லாஹ் விரும்பிய அளவில் அன்னார் (ஸல்) கூடாரத்தில் தொழுதார்கள். பின்னர் அன்னார் (ஸல்) வெளியே சென்று பார்த்தார்கள். சிறிது நேரம் வரை பார்வையிட்டார்கள். பின்னர், இந்த இணை வைப்பாளர்களின் குதிரை சவாரி வீரர்கள் அகழ்களை சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களை யார் கவனிப்பார்? என்று அன்னார் (ஸல்) கூறிக் கொண்டிருந்ததை நான் செவியுற்றேன். பின்னர், அன்னார் (ஸல்),அப்பாத் பின் பிஷ்ரே! என்று குரல் கொடுத்தார்கள். அப்போது நான் ஆஜராகிவிட்டேன் என்று ஹஸ்ரத் அப்பாத் (ரலி) அவர்கள் கூறினார்கள். உம்முடன் வேறு எவரும் இருக்கின்றாரா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, ஆம்! நான் எனது வேறு சில தோழர்களுடன் இருக்கின்றேன். நாங்கள் தங்களின் கூடாரத்தைச் சுற்றி இருக்கின்றோம் என்று அன்னார் (ரலி) பதில் அளித்தார்கள்.

அப்போது, நீங்கள் உங்களது தோழர்களுடன் செல்லுங்கள். மேலும், அகழ்களை சுற்றி வாருங்கள். இணை வைப்பாளர்களின் குதிரை சவாரி வீரர்களில் சில குதிரை சவாரி வீரர்கள் உங்களை வட்டமிட்டு வருகின்றனர். நீங்கள் கவனமற்று இருக்கும் நிலையில் திடீரென உங்கள் மீது தாக்குதல் தொடுக்க அவர்கள் விரும்புகின்றனர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பின்னர், அல்லாஹ்வே எங்களிடமிருந்து அவர்களின் தீங்கினை அகற்றிவிடுவாயாக! மேலும் அவர்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக! மேலும் அவர்களை தோல்வியுறச் செய்வாயாக! உன்னைத் தவிர வேறு எவராலும் அவர்களை தோல்வியடையச் செய்ய முடியாது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்.

பின்னர், ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்கள் தமது தோழர்களுடன் புறப்பட்டார்கள். மேலும், அபூஸுஃப்யான் இணை வைப்பாளர்களின் சில குதிரை சவாரி வீரர்களுடன் இருப்பதைக் கண்டார்கள். அவன் அகழ்களின் குறுகிய இடத்தில் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தான். மேலும், அதன் கரைகளில் அங்கு அமர்ந்திருந்த முஸ்லிம்கள் அவர்களைக் குறித்து தகவல் அறிந்து கொண்டுவிட்டார்கள். அவர்கள், அதாவது முஸ்லிம்கள் அந்த எதிரிகள் மீது கற்களையும், அம்புகளையும் வீசினார்கள். பின்னர் நாங்களும் அவர்களுடன் தங்கிவிட்டோம். மேலும், நாங்களும் அவர்கள் மீது அம்புகளை எய்தோம். எந்த அளவிற்கு என்றால், நாங்கள் அந்த இணை வைப்பாளர்கள் மீது அம்புகளை எய்தவாறு அவர்களை தங்களது இடத்திலிருந்து விலகுவதற்கு நிர்பந்தித்துவிட்டோம். மேலும், அவர்கள் தங்களது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றுவிட்டனர். மேலும் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்தேன். மேலும், நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை தொழுகையின் நிலையில் கண்டேன். பின்னர் நான் அன்னாரிடம் அந்த சம்பவத்தைக் குறித்து தெரிவித்தேன்.

ஹஸ்ரத் உம்மே ஸலமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

தூங்கிவிட்டார்கள். எந்த அளவுக்கு என்றால், நான் அன்னாருடைய மூச்சின் சப்தத்தை செவியுற்றேன். மேலும், நான் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் சுபஹ் தொழுகைக்கான பாங்கு கொடுத்ததை கேட்கும் வரையிலும் ஃபஜ்ர் வேளையின் வெண்மை தென்படும் வரையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துயில் எழவில்லை.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியே வந்தார்கள். மேலும், முஸ்லிம்களுக்கு தொழுகை நடத்தினார்கள். ஹஸ்ரத் உம்மே ஸலமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) மீது அல்லாஹ் கருணை புரிவானாக! அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளில் எல்லாரையும் விட அதிகமாக அன்னாரின் கூடாரத்துடன் (பாதுகாப்பு கருதி) இணைந்திருந்தார்கள். மேலும் எப்போதும் அதனை பாதுகாத்து வந்தார்கள். (கிதாபுல் மகாஸீ லில் வாகிதீ, பாகம் 1, பக்கம் 396-397, கஸ்வா கன்தக், தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், பதிப்பு 2013)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்: அன்ஸார் சகோதரர்களில் மூன்று நபர்கள் தங்களது சிறப்புகளில் மேன்மை மிக்கவர்களாக இருந்தார்கள். அதாவது, ஹஸ்ரத் உஸைத் பின் அல்ஹுழைர், ஹஸ்ரத் ஸஅத் பின் மஆஸ் மற்றும் ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் ஆகியோர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது M.A., (ரலி) அவர்களின் ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 229)

கிப்லா மாற்றம் தொடர்பான அறிவிப்பு உள்ளது. அதில், ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்களின் பெயரும் வருகின்றது. ஆக, ஹஸ்ரத் துவலைா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் பனூ ஹாரிஸாவில் லுஹர் அல்லது அஸர் தொழுது கொண்டிருந்தோம். மேலும் இரண்டு ரக்அத் பைத்துல் முகத்தஸை நோக்கி தொழுதிருந்தோம். அப்போது ஒரு நபர் வந்தார். மேலும், கிப்லா மஸ்ஜித் ஹராமை நோக்கி மாற்றப்பட்டு விட்டது என்று அவர் வந்து எங்களிடம் கூறினார்.

அன்னார் (ரலி) அறிவிக்கின்றார்கள்: பின்னர் நாங்கள் இடத்தை மாற்றிவிட்டோம். ஆண்கள் பெண்களின் இடத்திற்கு இடம் பெயர்ந்துவிட்டார்கள். மேலும் பெண்கள் ஆண்களின் இடத்திற்கு இடம் பெயர்ந்துவிட்டார்கள்.

ஓர் அறிவிப்பின்படி, அந்தத் தகவல் கொடுக்கக்கூடிய நபரின் பெயர் ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் பின் கைழி (ரலி) ஆகும். அன்னார் பனூ ஹாரிஸா கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள்.

ஆனால், மற்றோர் அறிவிப்பின் படி, அந்த நபர் அப்பாத் பின் பிஷ்ர் பின் வக்ஷ் ஆக இருந்தார்கள். அன்னார் பனூ அப்தில் அஷ்ஹல் கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீய் மஃரூஃபத்திஸ் ஸஹாபா, பாகம் 3, பக்கம் 148- 149, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஸுலஹ் ஹுதைய்பியா சந்தர்ப்பத்தின்போது மக்கத்து குரைஷிகளின் சார்பாக ஸுஹைல் பின் அம்ர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் நோக்கத்துடன் வந்தார். அப்போது, அந்த நேரத்திலும் ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் இரும்புக் கவசத்தை அணிந்தவாறு நின்று கொண்டிருந்தார்கள். அன்னாருடன் மற்றொரு ஸஹாபியான ஹஸ்ரத் ஸலமா பின் அஸ்லம் அவர்களும் இருந்தார்கள். பேச்சுவார்த்தையின் போது ஸுஹைலின் குரல் ஓங்கும் போது, இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு முன் உமது குரலை தாழ்த்திக் கொள் என்று அவரிடம் ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள்.

(ஸுபுலுல் ஹுதா வர் ரஷாஅத் , பாகம் 3, பக்கம் 52, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்)

ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்கள் எல்லாப் போர்களின் சந்தர்ப்பத்தின் போதும் முன்னணியில் இருந்து வந்தார்கள். ஆக, உயைய்னா பின் ஹிஸ்ன் ஃபஸாரி, பனூ கத்ஃபான் கோத்திரத்தின் சவாரிகளுடன் காபா எனுமிடத்தின் மீது தாக்குதல் தொடுத்தனர். அந்த இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பால் கொடுக்கும் பெண் ஒட்டகங்கள் மேய்ந்து வந்தன. எனவே அவர்கள் அந்த ஒட்டகங்களை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த நபரை கொன்றுவிட்டு, அவருடைய மனைவியையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகங்களையும் எடுத்துக் கொண்டு சென்று விட்டனர். இந்த செய்தி மதீனாவை வந்தடைந்ததும் குதிரை சவாரி வீரர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து ஆஜரானார்கள்.

அறிவிப்பில் குறிப்பு வருகின்றது: அன்ஸார் சகோதரர்களில், ஹஸ்ரத் மிக்தாத் பின் அஸ்வத் (ரலி) அவர்களுக்கு பிறகு முதன் முதலில் ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தடைந்தார்கள். (அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷாம், பாகம் 3-4,பக்கம் 174- 175, தாருல் கிதாபில் அரபி பெய்ரூத்,2008)

இந்தப் போர் திட்டம் தீகர்த் என்ற பெயரால் பிரபல்யமாகும். அதன் விளக்கம் ஸஹீஹ் புகாரியிலும் வந்துள்ளது. யஸீத் பின் அபீ உபைத் அவர்களிடமிருந்து அறிவிப்பு உள்ளது. அன்னார் கூறினார்கள்:

ஹஸ்ரத் ஸலமா பின் அகூஃ (ரலி) அவர்களிடமிருந்து இதைக் கேட்டேன். அன்னார் இவ்வாறு கூறிவந்தார்கள்: நான் ஃபஜ்ர் தொழுகையின் பாங்கிற்கு முன்பு மதீனாவிலிருந்து வெளியேறி குபாவின் பக்கம் சென்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பால் கொடுக்கும் பெண் ஒட்டகங்கள் தீகர்த் என்ற இடத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. கூறிவந்தார்கள்: அப்துர் ரஹ்மான் பின் அஃப் அவர்களின் ஒரு மகன் வழியில் என்னை சந்தித்தார். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் ஒட்டகங்களை கொண்டு சென்று விட்டனர் என்று அவர் கூறினார். யார் கொண்டு சென்றது? என்று நான் கேட்டேன். அதற்கு, கத்ஃபான் கோத்திரத்தைச் சார்ந்த நபர்கள் என்று அவர் கூறினார். கூறினார்கள்: இதைக் கேட்ட உடனேயே நான் யா ஸபாஹாஃ என்று மூன்று முறை உரத்த குரலில் விளித்தேன். மேலும், மதீனாவின் இரண்டு கற்கள் நிறைந்த மைதானத்தில் இருந்தவர்களுக்கு அந்தக் குரலை எட்டச் செய்தேன். பின்னர், நான் முன்னோக்கி மிகவும் வேகமாக ஓட்டம் பிடித்தேன். எந்த அளவுக்கு என்றால், அந்தக் கொள்ளையர்களை சென்று பிடித்து விட்டேன். அவர்கள் விலங்குகளுக்கு தண்ணீர் புகட்டிக் கொண்டிருந்தார்கள். நான் அவர்களை அம்புகளுக்கு இலக்காக்கினேன். நான் சிறந்த அம்பு எய்யக்கூடியவனாவேன். நான் அகூஃவின் மகன் ஆவேன். இன்றைய நாள் எப்படிப்பட்ட நாள் என்றால், இதில் பாலுட்டக்கூடியவள் யாருக்கு பாலுட்டினாள் என்பது தெரிந்துவிடும் என்று கர்ஜித்தவாறு அந்தக் கவிதை வரிகளை நான் படித்துக் கொண்டு சென்றேன்.

எந்த அளவுக்கு என்றால், அவர்களிடமிருந்து அனைத்து பால் கொடுக்கும் ஒட்டகங்களையும் நான் விடுவித்து விட்டேன். மேலும் நான் அவர்களிடமிருந்து முப்பது போர்வைகளையும் பறித்துக் கொண்டேன்.

கூறிவந்தார்கள்: நான் இதே நிலைமையில் இருந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்ற மக்களுடன் அங்கு வந்து சேர்ந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் அவர்களை தண்ணீர் அருந்தவிடவில்லை. மேலும் அவர்கள் தாகமுடையவர்களாக இருந்தனர். தாங்கள் அவர்களிடம் தற்போது படையை அனுப்புங்கள் என்று நான் கூறினேன்.

அதற்கு, அகூஃவின் மகனே நீங்கள் அவர்களை அடக்கிவிட்டீர்கள். எனவே மென்மையை மேற்கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

கூறினார்கள்.

ஹஸ்ரத் அகூஃ (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள்: பின்னர் நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் என்னை தமது ஒட்டகத்தில் தமக்குப் பின்னால் அமர்த்திக் கொண்டார்கள். மேலும், நாங்கள் அதே நிலையில் மதீனாவில் நுழைந்தோம். (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸீ, அறிவிப்பு எண்: 4194)

அடுத்த நற்குறிப்பு, ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஃ அவர்களுடையதாகும். அன்னாரின் மரணம் ஹிஜ்ரீ முப்பதாம் ஆண்டு அறுபத்தி ஐந்து வயதில் மதீனாவில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அன்னாருடைய ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள்.

(அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், தொகுதி 3, பக்கம் 84, தாருல் குதுபில் இல்மியா, 1990)

அன்னாரைக் குறித்து தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அன்னாரை முகவ்கிஸ் அவர்களிடம் எகிப்திற்கு அனுப்பி வைத்தார்கள். மேலும் ஓர் ஒப்பந்தத்தை வடிவமைத்தார்கள். அந்த ஒப்பந்தம் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் எகிப்து மீதான தாக்குதல் வரை இரு தரப்பினருக்கும் இடையில் நிலை பெற்றிருந்தது. (அல் இஸ்தீஆப் ஃபீய் மஃரூஃபத்திஸ் ஸஹாபா, தொகுதி 1, பக்கம் 314, தாருல் ஜைல், பெய்ரூத் 1992)

ஹஸ்ரத் ஹாதிப் (ரலி) அவர்கள் மிகவும் அழகிய உடலுக்கு சொந்தக் காரராக இருந்தார்கள். மெல்லிய தாடியுடையவராக இருந்தார்கள். கழுத்து குனிந்திருந்தது. பெரிய விரல்கள் கொண்டவர்களாக இருந்தார்கள். யஃகூப் பின் உத்பா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஃ (ரலி) அவர்கள் தாம் மரணமடைந்த நாளன்று நான்காயிரம் தீனார்கள் மற்றும் திர்ஹம்களை விட்டுச் சென்றார்கள். அன்னார் (ரலி) தானியங்கள் போன்றவற்றின் வியாபாரியாக இருந்தார்கள். அன்னார் (ரலி) தமது சொத்துக்களை மதீனாவில் விட்டுச் சென்றார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅத், தொகுதி 3, பக்கம் 85, தாருல் குதுபில் இல்மியா, 1990)

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹாதிபின் அடிமை இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் அன்னாரைக் குறித்த புகாரை எடுத்துக் கொண்டு வந்தார். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஹாதிப் நிச்சயமாக நரகத்திற்கு செல்வார் என்று அந்த அடிமை கூறினார். அதற்கு, நீ பொய்யுரைத்துள்ளாய். அவர் அதில் ஒருபோதும் நுழைய மாட்டார். ஏனெனில், அவர் பத்ர் போர் மற்றும் ஹுதைபிய்யா உடன்படிக்கையில் பங்கு பெற்றிருந்தார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், ஹதீஸ் எண்: 3864)

ஹஸ்ரத் ஸயீத் பின் முஸைய்யப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஃ (ரலி) அவர்களை கடந்து சென்றார்கள். அன்னார் கடை வீதியில் உலர்திராட்சை பழங்களை விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது, நீர் உமது விலையை அதிகரிப்பீராக அல்லது எமது சந்தையை விட்டு சென்றுவிடுவீராக என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள்.

மேலும் எழுதப்பட்டுள்ளது: அதாவது, ஹஸ்ரத் இமாம் ஷாஃபீ (ரஹ்) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: காஸிம் பின் முஹம்மது கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஈத் திடலின் சந்தையில் ஹஸ்ரத் ஹாதிப் (ரலி) அவர்களை கடந்து சென்றார்கள். அன்னாருக்கு முன்னால் இரண்டு கூடைகள் நிறைய உலர் திராட்சை பழங்கள் இருந்தன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அன்னாரிடம் அவற்றின் விலையை கேட்டார்கள். அப்போது, ஒரு திர்ஹமிற்கு இரண்டு மத் அளவு கொடுக்கின்றேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள்: தாயிஃப் நகரத்திலிருந்து வரக்கூடிய குழுவினர் குறித்து எனக்கு கூறப்பட்டுள்ளது. அதாவது அவர்கள் தங்களுடைய விலையின் மீது அதிகம் நம்பிக்கை கொள்கின்றனர். ஒன்று நீங்கள் உங்களது விலையை அதிகரியுங்கள் அல்லது வீட்டில் அமர்ந்து கொண்டு நீங்கள் விரும்பியபடி விற்பனை செய்யுங்கள்.

ஆக, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வீட்டிற்கு வந்த போது அன்னார் (ரலி) சிந்தித்து பார்த்தார்கள். அப்போது அன்னார் (ரலி) ஹஸ்ரத் ஹாதிப் (ரலி) அவர்களின் வீட்டிற்கு அன்னாரை சந்திப்பதற்காக சென்றார்கள். நான் தங்களிடம் கூறிய விஷயங்கள் என்னிடமிருந்து உங்கள் மீதான நிர்பந்தமுமில்லை. என்னுடைய எந்த தீர்ப்பும் இல்லை. நான் அந்த விஷயத்தை நகரவாசிகளின் நன்மைக்காகவே கூறியிருந்தேன். நீங்கள் விரும்பிய இடத்தில் விற்பனை செய்து கொள்ளுங்கள். எவ்வளவு விலையில் விற்பனை செய்ய வேண்டுமோ விற்பனை செய்து கொள்ளுங்கள். (சுனன் அல்குப்ரா, லில் பைஹகீ, பாகம் 6, பக்கம் 11146, தாருல் குதுபில் இல்மியா 2003)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) இது குறித்து கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மதீனா முனவ்வராவில் (சந்தையில் பொருட்களின்) விலையை நிர்ணயிப்பதில் இஸ்லாமிய அரசாங்கம் அதிகாரம் செலுத்தி வந்தது. ஆக, ஹதீஸில் வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருமுறை மதீனாவின் சந்தையில் வலம் வந்து கொண்டிருந்தபோது, ஹாதிப் பின் அபீ பல்தஃ அல்முஸல்லா என்ற பெயருடைய ஒரு நபர் கடை வீதியில் இரண்டு மூடை உலர் திராட்சைகளை வைத்துக் கொண்டு அமர்ந்திருப்பதை கண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம் விலையை கேட்டறிந்தார்கள். அப்போது, ஒரு திர்ஹமிற்கு இரண்டு மத் அளவு உலர் திராட்சை என்று அன்னார் கூறினார்கள். இந்த விலை சந்தையின் பொதுவான விலையை விட குறைவானதாக இருந்தது. அதன் காரணமாக, நீங்கள் உங்கள் வீட்டிற்கு சென்று இதனை விற்பனை செய்து கொள்ளுங்கள். ஆனால், சந்தையில் இவ்வளவு குறைவான விலையில் விற்பனை செய்வதை அனுமதிக்க முடியாது என்று அன்னார் (ரலி) அவருக்கு கட்டளையிட்டார்கள். ஏனெனில், இதனால் சந்தையின் விலை வீழ்ச்சியடைந்துவிடும். மேலும், மக்களுக்கு சந்தையின் வியாபாரிகள் மீது தப்பெண்ணம் உருவாகிவிடும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மார்க்கச் சட்ட வல்லுநர்கள் இது குறித்து நிறைய விவாதம் செய்துள்ளனர். சிலர், இப்படிப்பட்ட அறிவுப்புகளையும் பதிந்துள்ளனர். அதாவது, பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது அந்த கருத்திலிருந்து விலகிக் கொண்டார்கள். ஆனால், பொதுவாக மார்க்கச் சட்ட வல்லுநர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்தை ஒரு சரியான செயல்படுத்த தக்க விஷயமாக ஒப்புக் கொண்டுள்ளார்கள். அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளனர்: இஸ்லாமிய அராசங்கம் விலையை நிர்ணயிக்க வேண்டும். இது அந்த அரசாங்கத்தின் கடமையாகும். அவ்வாறு செய்யவில்லையென்றால், சமுதாயத்தின் ஒழுக்கத்திலும், நேர்மையிலும் வித்தியாசம் உருவாகிவிடும். ஆயினும், இந்த விஷயத்தை நினைவிற்கொள்ள வேண்டும். அதாவது, இந்த இடத்தில் சந்தைக்கு கொண்டு வரப்படும் பொருட்களைக் குறித்தே குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தப் பொருட்கள் சந்தைக்கு கொண்டு வரப்படவில்லையோ மேலும், தனிப்பட்ட முறையில் விற்கப்படுகின்றனவோ அவற்றைக் குறித்து இங்கு குறிப்பிடப்படவில்லை.

எனவே எந்தப் பொருட்கள் சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றனவோ மேலும், சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றனவோ அவற்றை குறித்து இஸ்லாத்தின் இந்த தெளிவான கட்டளை

உள்ளது. அதாவது, ஒரு விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். அப்போதுதான் எந்த ஒரு கடைக்காரரும் விலையை குறைக்க முடியாது.

ஆக, சில ஹதீஸ்களையும் மார்க்கச் சட்ட வல்லுநர்கள் எழுதியுள்ளனர். அவற்றிலிருந்து இந்தக் கருத்துக்கு வலு கிடைக்கின்றது. (குத்பாதே மஹ்மூத், தொகுதி 19, பக்கம் 307-308, ஜுன் 10,1938)

இங்கு போட்டிபோட்டுக் கொண்டு ஒருவர் மற்றவருக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவதற்காக முயற்சி செய்கின்றனர். எனவே ஒரே விலை இருக்க வேண்டும்.

பனூ முஸ்தலிக் போர் ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டு நடைபெற்றது. அதிலிருந்து திரும்பி வரும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நகீஃ என்ற இடத்தை கடந்து சென்றார்கள். அப்போது அங்கு விசாலமான பகுதியையும், புற்களையும் அன்னார் (ஸல்) கண்டார்கள். மேலும், ஏராளமான கிணறுகளையும் கண்டார்கள். எனவே, அந்த கிணறுகளின் தண்ணீரைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விசாரித்தார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் இந்த கிணறுகளை புகழ்ந்து பேசும்போது அவற்றின் தண்ணீர் குறைந்து விடுகிறது. மேலும், கிணறு வற்றிவிடுகிறது என்று கூறப்பட்டது. அப்போது, நீங்கள் கிணறு வெட்டுங்கள் என்று ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஃ (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். நகீஃ என்ற அந்த இடத்தை மேய்ச்சல் நிலமாக ஆக்குவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். மேலும், ஹஸ்ரத் பிலால் பின் ஹாரிஸ் முஸ்னீ (ரலி) அவர்களை அதன் கண்காணிப்பாளராக நியமனம் செய்தார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் இந்த பூமியின் எவ்வளவு பகுதியை மேய்ச்சல் இடமாக மாற்ற வேண்டும் என்று கேட்டார்கள். அப்போது, ஃபஜ்ர்பொழுது விடிந்த உடன் ஒரு உரத்த குரல் கொண்ட நபரை நிறுத்திக் கொள்வீராக.

இரவின் இருளில் வெகு தூரம் வரை குரல் சென்றடையும். எனவே பகல் நேரத்தில் சூரியன் உதித்து மேலே எழும்பிய பிறகு அந்த நேரத்தில் ஒரு நபரை நிற்கச் செய்யுங்கள். பின்னர், அவரை முகம்மல் எனும் பெயர் கொண்ட மலை மீது நிறுத்தி எங்கு வரை அவரது குரல் சென்றடையுமோ அந்த அளவு பகுதியை முஸ்லிம்களின் குதிரைகள் மற்றும் ஒட்டகங்களின் மேய்ச்சல் நிலமாக மாற்றிக் கொள்ளுங்கள். அதன் மூலம் அவர்களால் நல்ல முறையில் ஜிஹாது செய்ய முடியும். அதாவது, ஜிஹாதிற்கான முஸ்லிம்களுடைய குதிரைகளும், ஒட்டகங்களும் அங்கு மேயட்டும்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கேட்டார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! முஸ்லிம்களுடைய மேயக்கூடிய அந்த விலங்குகளைக் குறித்து தங்களின் எண்ணம் என்ன? முஸ்லிம்களுடைய மற்ற கால்நடைகள் குறித்து கருத்து என்ன? அதற்கு, அவை அதில் நுழையக் கூடாது. ஜிஹாதி அதாவது, ஜிஹாதிற்காக பயன்படுத்தப்படும் கால்நடைகள் மட்டுமே அங்கு மேய வேண்டும். மற்ற கால்நடைகள் தத்தமது இடத்தில் மேயட்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே ! எந்த பலவீனமான ஆண் அல்லது பெண்ணிடத்தில் குறைந்த அளவில் ஆடுகள் இருக்கின்றனவோ மேலும் அவற்றை இடம் மாற்றம் செய்வதற்கு அவர்களிடம் ஆற்றல் இல்லையோ அவர்களைக் குறித்து என்ன கருத்து உள்ளது? என்று ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அவர்களுடைய கால்நடைகளை அனுமதியுங்கள். அவை மேய்ந்து கொள்ளட்டும். ஏழைகளின் சிறிதளவு செல்வமாக இருப்பவற்றை நிச்சயமாக மேய விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 4, பக்கம் 352- 353, தாருல் குதுபில் இல்மியா, லெப்னான், 1993)

இந்த ஓர் அறிவிப்பு முன்னரும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒரு அன்ஸாரி இருந்தார். அவர் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களிடம் பேரீத்தந் தோப்புகளுக்கு நீர் பாய்ச்சி வந்த ஹர்ரா (எனும் இடத்திலிருந்த) அந்த கால்வாயைக் குறித்து சண்டையிட்டு வந்தார்.

ஓட விடுங்கள் என்று அந்த அன்ஸாரி கூறினார். ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் அதற்கு சம்மதிக்கவில்லை. எனவே அவர்கள் இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் (தீர்ப்புக்காக) வழக்கை கொண்டு சென்றார்கள்.

ஸுபைரே! நீங்கள் உங்களது தோப்புக்கு தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளுங்கள். பின்னர், உமது பக்கத்து தோப்புக்காரருக்கும் தண்ணீரை அனுப்பி விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதனால் அந்த அன்ஸாரிக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. இவர் உங்களது அத்தை மகன் என்பதால் தாங்கள் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளீர்கள் என்று அந்த நபர் கூறினார். அதனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகம் (நிறம் கோபத்தால்) மாறிவிட்டது. மேலும், ஸுபைரே! நீர் உமது மரங்களுக்கு நீர் பாய்ச்சிக் கொள்ளுங்கள். பின்னர் வரப்புகளைச் சென்றடையும் வரை தண்ணீரை தடுத்து நிறுத்திக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: (முஹம்மதே!) உமது இறைவனின் மீது ஆணையாக! அவர்கள் தங்களுக்கிடையில் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றவற்றில் உம்மை நீதிபதியாக ஆக்கி பின்னர் நீர் வழங்கும் தீர்ப்பினை ஏற்றுக் கொள்ளாத வரை அவர்கள் ஒருபோதும் நம்பிக்கை கொண்டவர்களாக மாட்டார்கள் என்ற இந்த வசனம் அல்லாஹ்வின் மீது ஆணையாக! அந்த நேரத்தில் இறங்கியதாக நான் கருதுகிறேன். இது புகாரியின் அறிவிப்பாகும்.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மஸாகாத் வஸ்ஸைர், ஹதீஸ் எண்: 2359,2360)

இந்த ஹதீஸில் எந்த அன்ஸாரியைக் குறித்த குறிப்பு உள்ளதோ அவரைக் குறித்து தஃப்ஸீர்களில் கருத்துவேறுபாடு உள்ளது. தஃப்ஸீர் குர்தபியில் மக்கி வன்னுஹாஸ் கூற்றின் படி, அந்த அன்ஸாரி ஹஸ்ரத் ஹாதிப் பின் அபீ பல்தஃ (ரலி) அவர்களாக இருந்தார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

(அல்ஜாமிவுல் அஹ்காமுல் குர்ஆனுல் குர்தபி, பாகம் 6, பக்கம் 441, பெய்ரூத் 2006)

நான் இன்று இவர்களைக் குறித்தே எடுத்துரைக்க இருந்தேன். சிறிதளவு எஞ்சியிருக்கின்றன. இன்ஷாஅல்லாஹ் எதிர்வரும் நாட்களில் எப்போதாவது எடுத்துரைப்பேன்.

தமிழாக்கம் :
மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 02 March 2023 Issue No. 9

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## முதல் பக்கத் தொடர்ச்சி... (மல்ஃபூஸாத்)

வேண்டும் என்றும் விரும்புகின்றாரோ அவர் மார்க்கத்தின் தொண்டராக விளங்குவதற்கு அவர் திறன் படைத்துள்ளார் என்று எமக்கு நம்பிக்கையூட்ட வேண்டும்.

நான் பலமுறை சத்தியம் செய்து கூறியுள்ளேன். நாம் ஒவ்வொரு பொருளையும் இறைவனுக்காக மட்டுமே நேசிக்கின்றோம். மனைவியாக இருக்கட்டும். பிள்ளைகளாக இருக்கட்டும். நண்பர்களாக இருக்கட்டும். (நாம் அவர்களை இறைவனுக்காகவே நேசிக்கின்றோம்) அல்லாஹ்விற்காகவே அனைவருடனும் எமது தொடர்பு உள்ளது.

**நட்பிற்கான உடன்படிக்கையில் சலுகை**

எமது மார்க்கம் என்னவென்றால், எந்த நபர் என்னுடன் நட்பு கொள்வாரோ அவருடைய அந்த நட்பை நான் இந்த அளவிற்கு பேணுகின்றேன். அதாவது, அவர் எப்படிப்பட்டவராகவும் இருக்கட்டும். என்னதான் ஆனாலும் சரி. என்னால் அவரை துண்டிக்க முடியாது. ஆயினும், அவர் ஒருவேளை தாமே உறவை முறித்துக் கொண்டால் பின்னர் எம்மால் ஒன்றும் செய்ய இயலாது. அவ்வாறு இல்லையென்றால், எம்மைப் பொருத்தவரை எமது நண்பர்களில் ஒருவர் சாராயம் குடித்துவிட்டு சந்தையில் விழுந்து கிடக்கின்றார் என்றால் மேலும், அவரைச் சுற்றி மக்கள் கூட்டமாக நின்றாலும்கூட பழி சுமத்துபவரின் எந்த பழிக்கும் அஞ்சாமல் நாம் அவரை தூக்கிக் கொண்டு வருவோம்.

கூறினார்கள்: நட்புக்கான உடன்படிக்கை என்பது மிகவும் விலைமதிப்பற்ற ஆபரணம் ஆகும். அதனை எளிதாக வீணடித்து விடக் கூடாது. நண்பர்களுடன் எப்படிப்பட்ட விரும்பத்தகாத விஷயங்கள் ஏற்பட்டாலும் கூட அவற்றை சகிப்புத் தன்மை மற்றும் பொறுமை எனும் வட்டத்திற்குள் நின்று சரி செய்து கொள்ள வேண்டும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1,பக்கம் 423, காதியான் பதிப்பு-2018)

## முதல் பக்கத் தொடர்ச்சி... (தப்ஸீரே கபீர்)

கூறியுள்ளான். அப்போதுதான் செயலில் ஏற்பட்ட குறைவு துஆவின் மூலமாக முழுமை பெற முடியும். ذ என்பதற்கு உவமை என்ற பொருளும் உள்ளது. இந்த பொருள்களின் அடிப்படையில் இந்த விஷயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. குழந்தைக்கு குழந்தைப் பருவத்தில் சேவைகளுக்கான அவசியம் இருப்பது போன்றே பெற்றோருக்கு முதுமையில் சேவைகள் தேவைப்படுகின்றன.

பெற்றோருக்கு இந்த துஆவும் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. எவர் அல்லாஹ்விடம் துஆ செய்து வருவாரோ அவருக்கு சுயமே தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கான எண்ணமும் இருக்கும். அதாவது, மேலே கூறப்பட்டுள்ள நல்ல எண்ணத்தை தமது உள்ளத்தில் உருவாக்கிக் கொண்டால் பின்னர் இறைவனும் அவரது குறைகளின் மீது திரையிட்டுவிடுகின்றான். அதாவது, அவரது செயல்களில் ஏற்பட்டு விடும் குறைவுகளை அல்லாஹ் முழுமை செய்துவிடுகின்றான். மேலே குறிப்பிடப்பட்ட இந்த வசனத்தின் கருத்து இந்த ஹதீஸுடன் பொருந்துகிறது. அந்த ஹதீஸின் கருத்து இதுவாகும். அதாவது, பெற்றோருக்கு தொண்டாற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்தும் எவருடைய பாவம் மன்னிக்கப்படவில்லையோ அவர் மீது சாபம் உண்டாகட்டுமாக. ஏனெனில், எவர் நல்லவராக இருப்பாரோ அதாவது மேலே கூறப்பட்ட கட்டளைக்கேற்ப செயல்படுவாரோ அவருடன் இறைவன் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வான் என்பதே இந்த வசனத்தின் கருத்தாகும்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 332, காதியான் பதிப்பு, 2010)

## கேள்வி & பதில்

### ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) வழங்கிய பதில்

காதியானிலிருந்து ஒரு நண்பர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்:

கேள்வி: ஹுஸூர்! எனது மரணத்திற்கு பின்னர் நீ எனக்கு நீராட்ட வேண்டும் என்று எனது தாயார் தனது மரணத்திற்கு முன்னர் என்னிடம் கூறியிருந்தார். ஆனால், எனது தாயார் கொரானா தொற்றால் மரணமடைந்துவிட்டார்கள். எனவே அன்னாரை நீராட்ட முடியவில்லை. அதன் காரணமாக எனக்கு மிகவும் வேதனை ஏற்பட்டுள்ளது. நான் செய்தது சரிதானா? என்பது தொடர்பாக தமக்கு வழிகாட்டல் வழங்கும்படி ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்கு அந்த நண்பர் கடிதம் எழுதியிருந்தார்.

அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது டிசம்பர் 19, 2021 தேதியிட்ட கடிதத்தில் அவரது கேள்வி தொடர்பாக கீழ்கண்டவாறு வழிகாட்டல் வழங்கினார்கள்:

பதில்: அசல் விஷயம் என்னவென்றால், பொதுவான சூழ்நிலையில் பெண்களின் மய்யத்தை பெண்களும், ஆண்களின் மய்யத்தை ஆண்கமே நீராட்டுவார்கள். கணவன் மனைவி விதிவிலக்கு. அவர்கள் ஒருவர் மற்றவருடைய மய்யத்தை நீராட்ட முடியும் ( அதற்கு அனுமதி உள்ளது).

நீங்கள் உங்களது தாயாரின் மய்யத்திற்கு நீராட்டவில்லை. எனவே நீங்கள் செய்தது மிகவும் சரி. அதுமட்டுமல்ல, அன்னார் கொரானா தொற்றின் காரணமாக மரணமடைந்துள்ளார்கள் என்று நீங்கள் எழுதியுள்ளீர்கள். எனவே மருத்துவ ரீதியிலும் அன்னாரை நீராட்டுவதற்கு உங்களுக்கு அனுமதி கிடைத்திருக்காது. எனவே இதன் காரணமாக நீங்கள் எவ்வகையில் வேதனையடைய அவசியமில்லை. அல்லாஹ் உங்களின் தாயாருடன் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக. மேலும் அன்னாரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. உறவினர்களாகிய உங்கள் அனைவருக்கும் அழகிய பொறுமையை வழங்குவானாக. மேலும் அன்னாரின் நன்மைகளுக்கும், துஆக்களுக்கும் வாரிசாக்குவானாக. ஆமீன்!

(ஸுஹுர் ஹுஸைன் சாஹிப், இன்சார்ஜ் பதிவுத் துறை அலுவலகம், ஜமாஅத் முரப்பி-PS லண்டன்)

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, 02 செப்டம்பர், 2022)

### நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**National Watch Company**
Sales & Service




B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad